விலை சதம் 5

முதற் பதிப்பு — பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்,
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, பட்டாசாத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனப் பிரதி சதம் 5
8 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, பட்டாசாத் தெரு, கொழும்பு

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO — Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு — இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது. — தரமாச்சுக்கும் குடியகலேம்

பதிக்கம் 1 | கொழும்பு, சர்வலுக்கு வரு மார்கழி 14 உ திங்கட்கிழமை | Colombo December 29, 1947 | விஜய 1867 ஸபர் பிறை 16 | இதழ் 217

இந்திய துவேஷச் சட்டங்கள் ஒழியவேண்டும்

இலங்கை இந்தியர்களுக்கு பிரஜா உரிமை வழங்குக

இலங்கை இந்திய தூதுக்கோஷ்டியின் டில்லி விஜயம்பற்றி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கருத்து

சென்னை, டிச. 26

ஆங்கில தினசரியான "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை "இந்தியா-இலங்கை சம்பாவணைகள்" என்னும் தலைப்பில் கீழ்க்கண்ட தலையங்கம் எழுதியிருக்கிறது:-

இலங்கை-இந்திய தூதுக்கோஷ்டியார் டில்லிக்குப் பயணமாயிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே டில்லியில் நடைபெறும் சம்பாவணைகளில் கலந்துகொள்ள இலங்கை இந்திய தூதுக்கோஷ்டியார் டில்லி செல்கின்றனர். இலங்கைவாழ் இந்தியர்களின் உரிமைகளையும் அந்தஸ்தையும்பற்றி டில்லியில் இரு அரசாங்கங்களுக்கு மிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை மயன்று இலங்கைப் பிரதம மந்திரியும் இந்தியா பிரதம மந்திரியும் இவ்விஷயம்பற்றி சமரசப் பேச்சு நடத்துகிறார்கள். இலங்கை-இந்தியர் பிரச்னைபற்றி 7 வருடங்களுக்கு முன் நடைபெற்ற சம்பாவணைக்குப் பின் இப்பொழுதுதான் இவ்விஷயம்பற்றி திரு டி. எஸ். சேனநாயகாவும் பண்டித நேருவும் கலந்து பேசுகிறார்கள். இந்த ஏழு வருட காலத்திற்குள் இந்தியாவின் நிலைமையிலும் இலங்கையின் நிலைமையிலும் பெரும் மாறுதல்கள் ஏற்படடுவிட்டன. இரு தலைவர்களும் இப்பொழுது முன்றாவது அரசாங்கத்தின் தலையில் இன்றி சுதந்திரமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி முடிவு செய்யும் நிலைமையிலிருக்கின்றனர்.

இம்முடிவு செய்வதற்குப் முடிவை ஊர்ஜிதம் செய்வதற்கும் இனி பிரிடிஷ் அரசாங்கம் குறுக்கிடவேண்டிய கேவலமான நிலைமை இப்பொழுது கிடையாது.

இலங்கையின் சுதந்திரத்தை மற்ற நாடுகளுக்கு முதன்முதலாக அங்கீகாரம் செய்தது இந்தியாவே. அதற்காக இலங்கைப் பிரதமர் மகிழ்ச்சியடைந்து தனது நன்றியைத் தெரிவித்திருக்கிறார். ஆகவே டில்லி சமரசப் பேச்சுக்கு இது ஓர் அபசகுனமாகும். இலங்கைவாழ் இந்தியர் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்து வெற்றியடைவதற்கு இது தக்கதோர் தருணமாகும்.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டமும் இந்தியாவில் பிரிட்டிஷார் தங்கள் அதிகாரத்தை மாற்றிவிட்டு வெளியேறுவதும் இந்தியா பூரண சுதந்திரம் அடைந்ததுமான சம்பவங்கள் இலங்கை மக்களிடையே பெரும் ஊக்கத்தை யுண்டுபண்ணியிருக்கின்றன. இந்தியா பெற்ற விடுதலையின் காரணமாகவே தங்களுக்கும் சுதந்தரம் கிடைத்துள்ளதென்பதைப் பெரும்பாலான இலங்கை மக்கள் உணர்கிறார்கள்.

மேலும் சென்ற மார்ச்சு மாதத்தில் டில்லியில் ஆசிய மகாநாடு நடைபெற்றபோதும் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதி கோஷ்டித் தலைவராக விஜயம் செய்திருந்த திரு பண்டாரநாயகா (ஸதல ஸதாபன மந்திரி) முக்கியமான பங்கெடுத்துக்கொண்டார், அதன்பயனாக அவர் இரு நாடுகளின் நெருப்பான்மையை உறுதிப்படுத்தினார்.

இவ்வித சுபசகுனங்கள் நிறைந்த சந்தர்ப்பத்தில் டில்லி சம்பாஷணை ஆரம்பமாகிறது.

பரம்பரையாக இலங்கையில் வாழ்ந்துவரும் 8 லட்சம் இந்தியர்கள் (பெரும்பாலும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள்) இலங்கையில் பிரஜா உரிமை பெறுவதைக் குறித்துள்ள பிரச்னையே இப்பொழுது முக்கியமான பிரச்னையாகும். இலங்கை இந்தியர் பிரச்னை தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை போன்று சிக்கலானதல்லவென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை நிறவேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டது. 1940 வது வருடம் டில்லியில் நடைபெற்ற சம்பாஷணைக்கு இலங்கைப் பிரதிநிதி கோஷ்டி தலைவராக வந்திருந்த இலங்கை அரசாங்க சபையின் அரசாங்கக் கட்சித் தலைவரான திரு டி. எஸ் சேனநாயகா, இந்தியர் ஜனப் பெருக்கததை இலங்கை தாங்கக்கூடியதாக இருந்தால் இலங்கை, இந்தியாவின் ஒரு பாகமாக இருப்பதைப் பற்றி தனக்கு ஆட்சேபமில்லையென்று தெரிவித்திருக்கிறார். ஆனால் திரு சேனநாயகா இந்தியர் ஜனப் பெருக்கத்தை இலங்கை தாங்கமுடியாது என்று தீர்மானிக்கவேண்டிய தேவையில்லை. அவருடைய நாட்டின் அரசாங்கம் நியமித்த இம்மிக்ரேஷன் கமிஷனர் ஸர் எட்வர்ட் ஜாக்ஸனே பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:-

"இலங்கையில் குடியேறியுள்ள இந்திய தொழிலாளர்களால் இலங்கையின் பொருளாதார நிலைக்குப் பங்கம் ஏற்படவில்லை, இந்தியத் தொழிலாளர்களால் இலங்கையின் செல்வம் பெருகி இலங்கைக்கு சுபிக்ஷமே ஏற்படடிருக்கிறது. இந்திய தொழிலாளர்களின் காரணமாக இலங்கைத் தொழிலாளர் சம்பளமும் பாதிக்கப்படவில்லை. ஆகலால் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையைத் தங்கள் தாயகமாக ஆக்கிகொள்வதினின்றும் அவர்களைத் தடை செய்வது நியாயமாகாது.

அவர்களுக்கு ஏனைய இலங்கை மக்களைப்போல பூரண பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும்."

ஆதலால் இந்தியர்மீது துவேஷம் பாராட்டிச் செய்யப்படடுள்ள சட்டங்கள் யாவும் ரத்துச் செய்யப்படவேண்டும்.

1941 வது வருடம் ஏற்பட்ட பாஜபாய்-சேனநாயகா ஒப்பந்தத்தை இந்தியா சட்டசபை அங்கீகரிக்கவில்லை. ஏனெனில் இந்தியர் உரிமைகளைப் பறிப்பதான இந்திய துவேஷ சட்டங்களை அந்த ஒப்பந்தம் ஊர்ஜிதம் செய்வதாக இருந்ததே அதற்குக் காரணமாகும். ஒப்பந்தத்தை இலங்கையில் வசிக்கும் இந்தியர்களுக்கு முன் குறிப்பிடட அளவு காலம் இலங்கையில் வசித்த இந்தியர்களுள் திருமப இலங்கையில் பிரவேசிக்க விரும்பு இந்தியர்களும் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டுமென்று இந்தியா சட்டசபை கோரியது.

டில்லியில் இலங்கை இந்தியர் தூதுகோஷ்டியினர்

இலங்கை அரசாங்கப் பிரதிநிதியைச் சந்தித்துப் பேசினர்

புதுடில்லி டிச. 27

இலங்கை இந்தியன் காங்கிரஸ் தலைவர் திரு சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் இலங்கையிலிருந்து புதுடில்லிக்கு வந்துள்ள இலங்கை இந்திய தூதுகோஷ்டியார் இலங்கையிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதி திரு. எம். டபிள்யூ. டி சில்வாவைச் சந்தித்து, இலங்கையிலுள்ள இந்தியர்கள் சம்பந்தமான சமூகப் பிரச்னைகளைக் குறித்து விவாதித்தனர். இத் தூதுகோஷ்டியில் இலங்கை சென்ட்ரல் சபையின் உப தலைவர் திரு பெரிசுந்தரம், இலங்கை இந்தியன் காங்கிரஸ் மாஜி தலைவர் திரு. அசீஸ், இலங்கை பிரதிநிதிகள் சபை அலுவலகத்தினர் திரு ராமாநுஜம் ஆகியோர் இருந்தனர்.

அவர்களுக்கு சில சம்பந்தமாகவும் தொழில் சம்பந்தமாகவுமான தொரு விதமான தடையுமிருக்கப்படலாகாது. இந்தியர்களுக்கு பாதுகாக்கப்பட்ட உரிமைகளும் வழங்கப்படவேண்டும். இவ்விதம் இந்தியா சட்டசபை நிறைவேற்றிய தீர்மானம் இரட்டைப் பிரஜா உரிமையைக் கோரவில்லை. இக்கொள்கைகள் நியாயமானவை. இலங்கை தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பலாகாது என்பதே இப்பொழுதுள்ள இந்திய தேசிய அரசாங்கத்தின் கொள்கையாகும்; இப்பொழுது இலங்கையில் இந்திய ஹை கமிஷனராகவுள்ள திரு வி. வி. கிரியும் முன்னர் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாக இலங்கையிலிருந்த திரு எம். எஸ். ஆனேயும் இவ்விரு விஷயங்கள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்திற்கு உறுதியான வாக்குறுதியளித்திருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் கவனிக்குமிடத்து இரு நாடுகளுக்குமிடையே சமரசமேற்படுத்த முயலுகிறது. இரு பிரதம மந்திரிகளும் பெரிய ராஜதந்திரிகளாகையால் அவர்களாலாகுமானால் சமரசப் பேச்சு வெற்றியுறுமென்று நம்புகிறோம்.

கொழும்புக்கு கவுன்டி கவுன்சில் அந்தஸ்து

மேயருக்குப் பதில் லார்டு மேயர் பதவி

கொழும்பு, டிச. 27

அடுத்த பெப்ரவரியில் இலங்கை டொமினியன் அந்தஸ்து பெறுவதோடு கொழும்பு நகரத்துக்கு கவுன்டி கவுன்சில் அந்தஸ்து வழங்கப்படும் என தெரிகிறது.

அதாவது ஒரு முனிசிபல் கார்பரேஷன் அந்தஸ்துடன் இப்போ உள்ள மேயர் பதவிக்குப் பதிலாக "லார்டுமேயர்" அல்லது மேயர்பிரபு பதவியு உண்டாக்கப்படும் எனத் தெரிகிறது.

மூவர் விபத்தில் மாண்டனர்

தீபத்தலாவையில் நடைபெற்ற சம்பவம்

பதுளை, டிச. 27

கிறிஸ்மஸ் தினத்திற்கு முதல் நாள் தீபத்தலாவை "சோவேமுகாமுக்கு" அருகாமையில் ஓர் மோட்டார் விபத்து சம்பவித்து அதன் பயனாக மூவர் மாண்டனர். நாலாவது நபர் ஒருவர் தற்போது அபாயகரமான நிலைமையில் இருக்கிறார்.

பிரஸ்தாப நால்வரும் ஆர். ஏ. எப். விமானப் படையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒரு ராணுவ லொறியில் போய்க்கொண்டிருக்கும்போதே பிரஸ்தாப விபத்து ஏற்பட்டதென்றும் தெரிகிறது.

பர்மா சுதந்திரதினக் கொண்டாட்டம்

இந்தியா, பாகிஸ்தான், சீன பிரதிநிதிகள்

ரங்கூன், டிச 27

பர்மா சுதந்திர தினமான 1948 ஜனவரி 4 ந் தேதி நடைபெறும் கொண்டாட்டத்தில் இந்திய பிரதிநிதியாக, இந்திய அரசியல் நிர்ணய சபைத் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாத்தும் பாகிஸ்தான் பிரதிநிதியாக சர்தார் அப்துர்ராப் நிஷ்தாரும், சீனாவின் பிரதிநிதியாக டாக்டர் ஜோர்ஜ் ஜேயும் கலந்துகொள்வார்கள் (ராய்ட்டர்)

சூறாவளியில் அகப்பட்டு மறைந்த படகு

61 பேரில் 13 பேர் காப்பாற்றப்பட்டனர்

ஷாங்கை, டிச. 27

மணிலாவில் 13 வருடங்களின் பின் நேற்று முன்தினம் ஏற்பட்ட கொடும் சூறாவளி காரணமாக காணாமற போன டேவிஷ் மோட்டார் படகிலிருந்த 31 பிரயாணிகள் மூலுமிகள் நதலீயோரில் 13 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனரென்று கூறப்படுகிறது. மேற்கொண்டும் காணாமற்போனவர்களை தேடுமாறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. [ராய்ட்டர்]

பாரீக மாஜி பிரதமர்

வெளிநாடு செல்வார்

டெஹ்ரான், டிச. 27

பாரீக பிரதமராக இருபத்திரண்டு மாதங்களாக இருந்த ஹனாயக கட்சிக்கு தலைமை வகித்து நடத்திய ஹாவ் எஸ் சுல்தானே தமது பதவியிலிருந்து இம்மாத முதற்பகுதியில் ராஜினாமாச் செய்திருந்தாரல்லவா? இவர் வெளிநாடு செல்வதற்கான உத்தரவுகளை பெற்றுவிட்டாரென்றும் இவர் அடுத்த வாரம் பாரீகத்தை விட்டு புறப்படக் கூடுமென்றும் பாரீகத்தில் உள்ள உயர்தர அதிகாரிகள் இன்று தெரிவித்தனர். இவர் விமான மூலம் பிரான்ஸ் சென்றதாக கூறப்பட்ட செய்திகள் ஆதாரமற்றவை என்று விமான நிலைய அதிகாரிகளும் பிரதமருடைய நண்பர்களும் மறுக்கின்றனர். (ராய்ட்டர்)

இந்தியாவுக்கு பிரிட்டனின் யுத்தக் கப்பல்

பாகிஸ்தான் கோரிக்கைபற்றி ஆலோசனை நடக்கிறது

லண்டன், டிச. 27

பிரிட்டிஷ் குரூய்ஸராக "அக்கிலீஸ்" என்ற கப்பலை இந்தியா வாங்குவதற்கு நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முடிந்து விட்டனவென்றும் இக்கப்பல் அடுக்க வரு— வசந்த காலப்பகுதியில் இந்தியாவுக்கு அனுப்பப்படுமென்றும் காமன்வெல்த் தொடர்பு காரியாலயம் இன்று அறிவித்துள்ளது. பிரிட்டனிடமிருந்து பேலும் மூன்று நாசகாரிக் கப்பல்களை வாங்குவதற்கு இந்திய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்துகிறது

பாகிஸ்தான் அரசாங்கம் கடற்படைக் கப்பல்களை வாங்குவதற்கு விடுத்துள்ள கோரிக்கைபற்றி ஆலோசிக்கப்படுவதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ராய்ட்டர்)

இலங்கை இந்திய பிரச்னை

பண்டித நேருவுடன் ஸ்ரீ வி. வி. கிரி பேச்சுவார்த்தை

திருப்திகரமான உடன்பாடு ஏற்படுமென நம்பிக்கை

புதுடில்லி டிச 27

இந்தியா — இலங்கை பேச்சுவார்த்தை சம்பந்தமாக இப்பொழுது இங்கு வந்திருக்கும் இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி, இந்திய பிரதம மந்திரி, பண்டித ஜவஹர்லால் நேருவுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார். இந்தியா, இலங்கை பிரச்னை சம்பந்தமாக இந்தியாவின் கட்சியை தயாரிக்குமாறு நோக்கத்துடனேயே இப்பேச்சுவார்த்தை நடந்துவருகிறது

இந்திய பிரதம மந்திரிக்கும் இலங்கைப் பிரதம மந்திரிக்குமிடையே டிசம்பர் 28 ந் தேதி நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகளின் போது பலவேறு பிரச்னைகள் பற்றி விவாதிக்கப்படும்.

ஆனால் இலங்கையில் உள்ள இந்தியர்களின் பிரஜா உரிமை இலங்கை தோட்டங்களிலும் எஸ்டேட்டுகளிலும் வேலை பார்த்துவரும் இந்திய தொழிலாளர்களின் நிலைமை ஆகிய இரு முக்கிய பிரச்னைகள்பற்றி நீண்டநேரம் விவாதிக்கப்படும்.

இந்த பேச்சுவார்த்தைகளின் முடிவு திருப்திகரமாய் இருக்கும் என்றும் இரு தேசங்களுக்கிடையே சுமுகமான உடன்பாடு ஏற்படும் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் நம்புகின்றன.

இலங்கை பிரதமர் ஸ்ரீ சேனநாயக்கா

பம்பாய் சேர்ந்தார்

பம்பாய், டிச. 26

இலங்கை பிரதமர் ஸ்ரீ டி. எஸ். சேனநாயக்கா இன்று விமான மூலம் இங்கு வந்து சேர்ந்தார். நாளையதினம் காலை லாஞ்சிக்குப் போகும் மார்க்கத்தில் போபாலுக்குப் புறப்படுவார்.

ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் திருவாங்கூர் கல்வி மந்திரி?

திருவனந்தபுரம், டிச. 27

திருவாங்கூர் கல்வி மந்திரியாக ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது. இதற்கு காந்திஜியின் ஆசீர்வாதத்தை ஸ்ரீ ஜி ராமச்சந்திரன் பெற்று விட்டார் என்றும் அடிப்படைக் கல்வி ஸ்தலத்தை சென்னை மாகாணத்திலிருந்து திருவாங்கூர் சமஸ்தானத்திற்குக் கொண்டு போக அவருக்கு காந்திஜி அனுமதியளித்துள்ளார் என்றும் தெரிகிறது.

ஸ்ரீமதி பண்டிட் மாஸ்கோ புறப்பட்டார்

புதுடில்லி, டிச. 26

சோவியத் யூனியனில் இந்தியாவின் எதானிகரான ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட இன்றிரவு மாஸ்கோவுக்குப் புறப்பட்டார். பண்டித நேரு, ஸர் ராஜா சங்கர் பாஜபாய், சோவியத் எதானிகராலயத்தைச் சேர்ந்தவர்கள் முதலியோர் விமான தளத்திற்கு வந்து அவரை வழி அனுப்பினர்.

பர்மா சுதந்திரத்துடன் பதவி மாற்றம்

இந்திய ஹைகமிஷனர் ஸ்தானிகராகிறார்

ரங்கூன், டிச 27

பர்மா பூரண சுதந்திரம் அடையும் ஜனவரி 4 ந் தேதி முதல் ரங்கூனிலுள்ள இந்திய ஹைகமிஷனர் காரியாலயம் ஸ்தானிகர் காரியாலயமாக கருதப்படுமென்றும் இப்பொழுது பர்மாவிலுள்ள இந்திய ஹை கமிஷனர் டாக்டர் எம். ஏ. ராவுப், அங்கு முதல் இந்திய ஸ்தானிகராக இருப்பாரென்றும் அறிவிக்கப்படுகிறது. இதே தினம் முதல் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இடங்களிலுள்ள பர்மா ஹைகமிஷனர்களும் ஸ்தானிகர்களாக கருதப்படுவர். (ராய்ட்டர்)

நேஷனல் லொசிஞ்சர். பிஸ்கெற்

நல்ல அனுபவம் வாய்ந்தவர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற
லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளும்
பாலர் முதல் வயோதிபர் வரை விரும்புவது
நேஷனல் லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளுமே.
மொத்தமாகவும், சில்லறையாகவும்
குறைந்த விலைக்கு எங்கும் கிடைக்கும்.
ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!
நேஷனல் கொன்பெக்ஷனரி கம்பெனி,
489, பேலிய கொட, கழனியா.
டெலிபோன்: கழனியா 85.

இப்பொழுதே வாங்குங்கள். பிந்தினால் கிடைப்பதரிது
நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு இரட்டிப்பங்கு பெறுமதியுள்ளது

உங்கள் டெங்கனில் — மங்கள சூரியன்
மெய்கண்டான்
REGD. 7479
திருக்குறட் கலண்டர்

தேதி ஒற்றைகளில் மெய்கண்டான் பிறெஸ். படங்களில் மங்களகரமான சூரியன் கவனித்துப் பார்த்து வாங்குங்கள்.

இனும்: அன்சேர்ந்த நெஞ்சினுக்கில்லை இருள்சேர்ந்த இன்னா வுலகம் புலர்

என்னும் திருக்குறளுள்ள எங்கள் கலண்டருக்கு No. 1 டயறி இலை-குறித்த குறளுள்ள தேதி ஒற்றையில் எங்கள் அச்சியந்திரசாலையின் அடையாளமும் உள்ளது. அத்தேதி ஒற்றையை கிழித்து அனுப்பினால் டயறி அனுப்பலாம்.

மெய்கண்டான் தமிழ் டயறி
No. 1 & No. 2
மிகவும் பிரயோசனமுள்ளன. கையடக்கமான அளவும் அழகும் உறுதியும் உள்ளன.

எல்லாப் பிரபல வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும்.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

கொழும்பு முனிசிபல் எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆண்டுமலர் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலைக்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரதெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வசித்து ஆண்டு மார்கழி மீ 14 உ
திங்கட்கிழமை

புரளி

"திணற்றுக்குள் ஒருவன் நின்றான், மழை பெய்தது மழுக தமியைப் பிடித்துக் கொண்டு வெளியே ஏறி வந்தான்" என்று ஒருவர் சொன்னார். இதை நாம் நம்ப முடியுமா? மழுக தமியைப் பிடிப்பதாவது வெளியேறுவதாவது என்றுதான் நாம் சிரிப்போம்.

இந்தவகையில்தான் இன்று சில பத்திரிகைச் செய்திகள் வெளிவருகின்றன. நேற்றுமுன்தினம் ஒரு தமிழ் தினசரியின் அரசியல் நிருபர் தமது எண்ணப்படி இலங்கை அரசியலை மாற்ற முற்பட்டிருக்கிறார். இன்றுள்ள மந்திரி சபையில் எக்கச்சனையோ மாற்றங்கள் ஏற்படுமென்றும் கூறுவதோடு நிலாமல் திரு ஜீ ஜீ பொன்னம்பலத்திற்கு மந்திரிப் பதவியும் வழங்க எத்தனித்திருக்கிறார்.

வேஷ்யம் என்ற தலைப்பின் கீழ் ஒரு விஷயத்தை பத்திரிகையில் கூறும்பொழுது அதில் சிறிதாவது உண்மை இருக்கவேண்டும். சற்றேனும் உண்மையிராது முழுவதும் கற்பனை சக்தியை உபயோகிப்பது பத்திரிகை உலகில்நாம் அறியாததொன்றாகும்.

திரு பொன்னம்பலம் பதவி ஏற்பதென்பது, உண்மையில் சிங்கள வகுப்புவாதிகள் மனம் திரும்பினால்தான் நடைபெறக் கூடிய காரியமாகும். இதைப் பள்ளிச் சிறாரும் அறிவர். அப்படியிருக்க அரசியலில் ஈடுபடும் அல்லது ஈடுபடுவதுபோன்று நடிக்கும் நிருபர் அறியாதது ஆச்சரியமாகும் இன்றையசேனநாயக்கா அரசாங்கம் ஸ்திரமானதென்று பொது மக்களுக்குக் காட்டுவதற்கு மந்திரி சபையினர் பிரமப் பிரயத்தனங்கள் செய்கின்றார்கள். அரசாங்கத்தை ஆதரிக்கும் பத்திரிகைகளுக்குத்தான் அரசாங்க விளம்பரங்கள் கூடக் கொடுக்கிறார்கள் என்பதாகக் கேள்வி. அரசாங்கத்தின் ஊழல்களை பொது மக்களுக்கு எடுத்துக்காட்டும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதைத் தடுக்கவும் செய்வார்கள் சென்ற சில மாதங்களுக்கு முன்பு ஒரு நூறுவருட சேவையுள்ள ஆங்கில பத்திரிகை ஒன்றிற்கு விளம்பரம் கொடுப்பதை போக்குவரத்து மந்திரி திரு கொத்தலாவலை நிறுத்தியது சகலருக்கும் தெரிந்ததே.

இந்த நிலைமையில் "அறியப்படுகின்றது" "சொல்லப்படுகின்றது" என்னும் சொற்களை வைத்துக்கொண்டு பொய்யுரைகளை எழுதிய நிருபர் யாராலாவது தூண்டப்பட்டே இவ்வாறு செய்திருக்கவேண்டுமென்று நாம் எண்ண இடமுண்டு

திரு பொன்னம்பலம் தமிழருக்கு இந்நாட்டு அரசியலில் பங்கு உண்டு என்று சிங்கள வகுப்புவாதிகள் தாராள மனப்பான்மை காட்டினால் மட்டும் மந்திரி சபையில் சேர்ந்துகொள்ளுவாரேயன்றி மற்றும்படி எதிர்க்கட்சியாருடன் தான் ஒத்துழைப்பார்.

இந்திய சரித்திர காங்கிரஸ் கூட்டம்

வகுப்புவாதக் குறுகிய நோக்கமுடன் சரித்திரம் வேண்டாம்

பம்பாய், டிச. 27

பம்பாய் பிரதமர் ஸ்ரீ பி. ஜி. கேர் இந்திய சரித்திர காங்கிரஸின் 10-வது வருடாந்திர மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் சரித்திராசிரியர்களும் அறிஞர்களும் சரித்திரம் எழுதுவதில் குறுகிய மனப்பான்மையையும் வகுப்புவாத நோக்கத்தையும் தேசிய வேறுபாடுகளையும் தவிர்க்க வேண்டும் என்று கூறினார்.

ஸ்ரீ கேர் மேற்கொண்டு பேசியதாவது:- இந்திய சரித்திரத்தையே அறியாத சில அந்நியர்கள் நமமை அகௌரவப்படுத்தும் முறையிலும் நமது குறைபாடுகளைப் பெரிதுபடுத்தியு சரித்திரம் எழுதியிருக்கின்றனர் இப்பொழுது ஏற்பட்டுள்ள சுதந்திர சூழ் நிலைமையில் இந்திய சரித்திரத்தைத் திருத்தி எழுத நமக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது உள்ளது உள்ளபடியே நாம் எழுத வேண்டும் சரித்திராசிரியர்கள் நியாயமான வழியிலிருந்து பிறழக் கூடாது கட்சிப் பிரதிகட்சி முறையில் சரித்திரம் போதிக்கப்படுவதால் தான் மனிதன் யுத்தகதைப்பற்றிச் சிந்திக்கிறான் மனிதவர்க்கத்தின் எதிர்காலத்தில் நிரந்தர அமைதி நிலவவேண்டுமானால் சரித்திரகதை வேறு வழியில் எழுத வேண்டும். வேறு வழியில் சொல்லிக்கொடுக்கவேண்டும்'.

பாகிஸ்தான் முஸ்லிம் நாடா?

அடுத்தபடியாக அலிகார் சர்வகலாசாலை சரித்திரப் பேராசிரியர் மகமது ஹபீப் பேசுகையில், மகாத்மா காந்தியும் இதர இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களும் அடைந்த வெற்றியைப் பாராட்டினார். அவர் மேற்கொண்டு பேசியதாவது:- "நமது நாடு அந்நியரின் மிரட்டியில் நசுக்குண்டு தவிக்கும் பொழுது, எக்காலத்திலும் கண்டறியாத ஒரு மகானைக் கடவுள் அனுப்பி வைத்தார். அவரது தெய்வீகம் வாய்ந்த தலைமையின் கீழ் 30 வருஷகாலமாக ரதத்தம் சிந்தாது நடத்திய போராட்டத்தின் பயனாக ஒரு மாபெரும் சாம்ராஜ்யமே கவிழ்ந்து விட்டது.

"முஸ்லிம் நாடு என்ற பெயரில் பாகிஸ்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்தியப் பிரிவினை என்ற ராட்சஸத்தனத்தை நாம் இந்திய சரித்திரத்தில் எங்குமே கண்டதில்லை இனி நாம் சமாதான முறைகளைக் கையாண்டு இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஐக்கியப்படுத்த வேண்டும். இப்பொழுதுள்ள நிலைமையில் இருநாட்டு மக்களுக்கும் பொது பிரஜாவுரிமை அளிக்கலாம் தேசிய ஐக்கியமில்லாத தேசிய சுதந்திரம் தால பிரயோசனமேயில்லை. இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஐக்கியப்படுத்துவதே நமது முதல் லட்சியமாகஇருக்கவேண்டும்

பின்னர் பம்பாய் பிரதம நீதிபதி ஜஸ்டிஸ் சர்க்கரையும் இந்தியா மீண்டும் ஐக்கியப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்.

ஜெர்மனியின் நிலைமை

ஆங்கிலோ-அமெரிக்க பிரதேசத்துடன் பிரஞ்சு பிரதேசம் இணைக்கப்படும்

பாரிஸ், டிச 27

ஜெர்மனியிலுள்ள ஆங்கிலோ-அமெரிக்க ஆக்கிரமிப்பு பிரதேசங்களுடன் பிரஞ்சு பிரதேசமும் இணைக்கப்படுமென்று தெரிகிறது அது சம்பந்தமாக பிரஞ்சு பிரதமர், பிரஞ்சு அந்நியநாட்டு மந்திரி, பிரஞ்சு ஆக்கிரமிப்பு பிரதேச அதிகாரிகள் இன்று கூடிப் பேசினார்கள்.

சோவியத் பிரதேசத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒழிக்கப்படுவதுபற்றி ஆங்கிலோ-அமெரிக்க பிரதேசங்களிலுள்ள ஜெர்மன் அரசியல் தலைவர்கள் கூடி ஞாயிற்றுக்கழமையும் திங்கட்கழமையும் ஆலோசனை செய்வார்கள் சோவியத பிரதேசத்திலிருந்து தப்பியோடிய துரிஞ்சியா மாநில பிரதமர் டாக்டர் பால் இப்பொழுது மூனிச் நகர் வந்து சேர்ந்திருக்கிறார்.

புதுடில்லியில் இலங்கைப் பிரதம மந்திரி

இலங்கை வாழ் 8 லட்சம் இந்தியரின் அந்தஸ்தும் உரிமைகளும்

இலங்கை-இந்தியா பாதுகாப்பு

இந்தியா பிரதம மந்திரியுடன் சமரசப் பேச்சு

பண்டித நேருவுக்கு இலங்கை இந்திய வர்த்தகர் சங்கத்தின் தந்தி

புதுடில்லி, டிச. 27

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள அரசியல் பிரச்னைகள்பற்றி இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுடன் கலந்து பேசுபொருட்டு இலங்கையின் பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகா, இன்று புதுடில்லிக்கு வந்து சேர்ந்தார். அவர் நாளை பகல் 10 மணிக்கு பண்டித நேருவைச் சந்தித்துப் பேசுவார். அவர் டில்லிக்கு வரும் மார்க்கத்தில் சாஞ்சியில் நடைபெற்ற புத்த விஹாரை அஸ்திவாரக்கல் நாட்டு விழாவிற்கு விஜயம் செய்தார்.

இப்பொழுதுள்ள ஏற்பாட்டின்படி திரு டி. எஸ். சேனநாயகா செவ்வாய்க்கிழமையன்று டில்லியிலிருந்து கராச்சிக்குப் புறப்படுவார் அதன் பின் அவர் கராச்சியிலிருந்து புறப்பட்டு பம்பாயிலும் சென்னையிலும் தங்கி கொழும்புபோய்ச் சேருவார். இலங்கை பிரதம மந்திரியின் டில்லி விஜயம் இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் மிகுந்த ஊக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறது ஒரு சமயம் அவர் வெளியிட்ட அபிப்பிராயம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பண்டித நேருவை போன்ற சிறந்த ராஜதந்திரியொருவர் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பாரேயாகில், இலங்கை-இந்திய பிரச்னைகளை ஒரு நிமிட நேரத்திற்குள் தீர்த்துக்கொள்ள முடியுமென்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைவாழ் 8 லட்சம் இந்தியர்களின் உரிமைகளையும் அந்தஸ்தையும் பற்றியும், இந்தியர் குடியேற்றக் கட்டுப்பாடைக் குறித்தும், இலங்கை-இந்தியா பாதுகாப்புப் பிரச்னையைப்பற்றியும் இரு பிரதம மந்திரிகளும் கலந்து பேசுவார்கள் என்று தெரிகிறது.

'ஹிந்து' பத்திரிகையின் கருத்து

சென்னை, டிச, 27

இந்தியா - இலங்கை உறவுகள் என்ற தலைப்பின் கீழ் 'ஹிந்து" பத்திரிகை பின்வருமாறு தலையங்கம் எழுதியிருக்கிறது:-

சில வருடங்களாக தீர்க்கப்படாது இருந்துவரும் இந்தியா - இலங்கை உறவுகள் சம்பந்தமான கஷ்டமான பிரச்னைகளைக் குறித்த இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவுடன் கலந்து பேசுவதற்காக இலங்கை பிரதம மந்திரி பண்டிதநேரு டில்லிக்கு விஜயம் செய்திருக்கிறார் இவைகளில் முக்கியமான பிரச்னைகள், இலங்கைவாழ் இந்தியர்களின் அந்தஸ்தைப் பற்றியதும், இந்தியா - இலங்கை வர்த்தகம், பொருளாதாரம் இவைகளின் எதிர்காலத்தைப் பற்றியதுமாகும் இப்பிரச்னைகள் இதுவரை தீர்த்துக் கொள்ளப்பட முடியாது திகைப்பை உண்டு பண்ணி வந்திருக்கின்றன வருடக் கணக்கில் இப்பிரச்னைகளைப்பற்றி நடைபெற்ற சமரசப் பேச்சுக்கள்எல்லாம் வெற்றி பெறாமல் ஸ்தம்பிதமான நிலைமை தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது இதனால் அருகருகேயுள்ள இருநாடுகளும் மலைக்கும்படியான நிலைமையும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது முன்போல நெருக்கடியான நிலைமையென்றி சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது இந்தியாவும் இலங்கையும் இப்பொழுது சுதந்திரமடைந்துவிட்டன ஆகவே இவ்விரு நாடுகளுக்கும் சம்பந்தமான பிரச்னைகளில் மூன்றாம் பேர்வழி குறுக்கிடும் நிலைமை மாறிவிட்டது. இரு நாடுகளும் சம அந்தஸ்தில் இரு நாடுகளின் ஜனங்களுக்கும் பரஸ்பரம் நன்மை பயக்கத்தக்க முறையில் பிரச்னைகளை ஆராய்ந்து முடிவு செய்ய முடியும் இந்த சமரசப் பேச்சில் இரு நாடுகளும் அண்டை நாடுகள் என்ற முறையில் எவ்வித கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமோ அவ்வித கொள்கையை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். திறந்த மனதுடன் நேர்மையாகவும் உயர்ந்த நோக்கங்களையும் லட்சியங்களையும் தீர்க்க தரிசனத்துடன் துருவி ஆராய வேண்டியதும் அவசியமாகும்.

இரு நாடுகளுக்கிடையே பிளவு உண்டுபண்ணக் கூடிய பிரமாதமான பிரச்னைகள்எதுவுமில்லை. எதிர்காலத்தில் இலங்கையில் இந்தியர் குடியேறுவது சம்பந்தமாக இருநாடுகளுக்குமிடையே கிட்டத்தட்ட ஏற்கனவே ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. எதிர்காலத்தில் எப்படிப் பட்டவர்கள் இலங்கையில் வரவேற்கலாமோ அப்படிப்பட்டவர்கள் இலங்கையில் வரவேற்பதற்கும், அதுசம்பந்தமாக அதன் இஷ்டப்படி இலங்கை சிந்தனைகளை விதித்துக் கொள்வதற்கும் இந்தியா சம்மதித்து விட்டது. ஆனால் ஏற்கனவே இலங்கையில் வசிக்கும் இந்தியர்களின் நிலைமையையும் உரிமைகளையும் பற்றி தீர்மானிக்க வேண்டிய பிரச்னையே இப்பொழுது எதிர்நோக்கியிருக்கிறது.

இது சம்பந்தம் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு மார்க்கத்தை இலங்கை அரசாங்கமே சுட்டிக்காட்டியுள்ளது. சோல்பரி கமிஷனும் திரு டி. எஸ். சேனநாயகாவுமே அவ்வழியைக் காட்டியிருக்கிறார்கள சோல்பரி அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது:- "இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள இலங்கைக்கு வருவதை இந்திய அரசாங்கமே 1939-ம் ஆண்டு முதல் தடைசெய்துவிட்டபடியால், இலங்கையிலுள்ள இந்திய தொழிலாளர் அனைவரும் 5 வருடங்களுக்குமேல் இலங்கையில் குடியேறியுள்ளவர்களாகவே இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்களாகவே இனிமேல் இந்தியத் தொழிலாளர் வருகையை இலங்கை கட்டுப்படுத்திக்கொள்ளலாம். இப்பொழுதுள்ள இந்திய சமூகத்தை இலங்கை சமூகத்தின் ஒரு பகுதியாக பாவித்து அந்த இந்தியர்களை இலங்கையர்களாக்கிக் கொள்ளவேண்டும்" சோல்பரி அறிக்கை விவாதத்தின் போது திரு சேனநாயகா தெரிவித்த அபிப்பிராயம் இதைவிட இன்னும் தெளிவாகஇருக்கிறது. அவர் கூறியதாவது:- "இந்தியர்களாகிய நீங்கள் இலங்கையில் நிரந்தரமாக இருப்பீர்களாகில் உங்களை ஆவச்சேர்த்துக்கொள்ளத்தயாராகவிருக்கிறோம்."

ஆகவே வலிய அழைத்ததன் பேரில் இலங்கை சென்று குடியேறி இலங்கையைச் செழிக்கச்செய்த இந்தியர்களை இலங்கையர்களாக்கிக் கொள்வதே உத்தமமான மார்க்கம் இவ்வகையிலேயே குடியேறிய இந்தியர்களை இந்திய அரசங்கம் இந்தியாவுக்குத் திரும்ப அழைத்துக்கொள்ள உடன்படுவது ஒழுங்கல்ல. கொள்கை யளவில் முடியாவது இரு நாடுகளும் ஒதுக்போக முயலவேண்டும். நிர்ந்தரமின்றி இந்தியாவுக்கு இலங்கைக்குமிடையே ஓடித்திரியும் இந்தியர்களை இலங்கையர்களாக்க வேண்டுமென்று இலங்கையை வற்புறுத்த இந்தியாவிரும்பவில்லை. ஆனால் ஏற்கனவே இலங்கையில் நிரந்தரமாக வாழும் இந்தியர்களை இலங்கையர்களாக இலங்கைஒடு பொள்ளும்படி இந்தியா வற்புறுத்த வேண்டும். அப்படிச் செய்வது அதன் கடமையும் உரிமையுமாகும். இலங்கையைத் தாயகமாக ஏற்றுக்கொள்ளும் இலங்கைவாழ் இந்தியர் அனைவருக்கும் பிரஜாஉரிமை அளிக்கப்படவேண்டும்.

இந்திய வர்த்தகர் சங்கத்தின் தந்தி

கொழும்பு டிச. 27

இலங்கை வாழ் இந்தியர் பிரஜா உரிமை சம்பந்தமாக புதுடில்லியில் இலங்கைப் பிரதம மந்திரி இந்தியா பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசும் தருணத்தில், இலங்கை இந்திய வர்த்தகர் சங்கத்தார் அந்த உரிமைகள் சம்பந்தமாக சில கோரிக்கைகளைத் தெரிவித்து பண்டித நேருவுக்கு தந்தியனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது சங்கத் தலைவர் திரு எச். எஸ் மூஸாஜி பண்டித நேருவுக்கு அனுப்பியுள்ள அம்மகஜரின் விவரமாறு அறிவித்துகிறார்:- இலங்கை சட்டங்களை மீறாமல் குறிப்பிட்ட தேதியில் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளவர்களும் குடியேற்ற யோக்கியதையுள்ளவர்களுமான எல்லா இந்தியர்களுக்கும் பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும் இலங்கையில் 5 வருடம் வசித்தவர்களும் இலங்கையைத் தாயகமாகக்கொள்ள விரும்புகிறவர்களும் குடியேற்ற யோக்கியதையுள்ளவர்களாகக் கருதப்படவேண்டும். கூடிய அளவு உள்ள இந்தியர்களை இலங்கையர்களாகும் முறையில் குடியேற்ற யோக்கியதாமசம் வரையறுக்கப்படவேண்டுமே யன்றி உள்ளவர்களையும் வெளியேறக்கூடிய நிலைமையில் குடியேற்ற யோக்கியதாமசம் வரையறுக்கப்படலாகாது. இதைத் தவிர இதர குடியேற்ற நிபந்தனைகளைப் புகுத்தலாகாது பிரஜா உரிமைச் சட்டம் பூரணமானதாக இருக்கவேண்டுமே யொழிய அதைக் கட்டுப்படுத்தலாகாது நில விஷயத்தில் பாரபட்சமான நிபந்தனை கூடாது. இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர்களைப் போல நிலம் வாங்கிக் குடியேற வசதியளிக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் அவர்களது நிரந்தரமான அடிமை வாழ்வு ஒழிந்து சுதந்திரமான மனிதர்களாக வாழ முடியும், புதிதாக இந்தியர் வருகையை இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியுமாதலால் அதனால் புதிதாக வரும் இந்திய வர்த்தகர்களையும் இலங்கை வருவதை கட்டுப்படுத்த கூடுமாதலால், வர்த்தக ஸ்தாபனங்கள் குறிப்பிட்ட அளவுக்கு இலங்கையர் மூலதனத்தையும் இலங்கை குமாஸ்தாக்களையும் உபயோகிக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் சட்டம் இயற்றப்பட வேண்டிய அவசியம் இல்லை இலங்கையில் மற்ற நாடவருக்கு அளிக்கப்படும் எல்லா உரிமைகளும் இந்தியர்களுக்கும் அளிக்கப்படவேண்டும்.

ஆஸ்திரேலியாவிலுள்ள மலேயா மாலுமிகள்

திருப்பியனுப்பப்படுவர் என மந்திரி கூறுகிறார்

கான்பெரா, டிச 27

ஆஸ்திரேலிய குடியேற்ற இலாகா மந்திரி திரு ஆர். ஏ. கால்வெல் இன்று பேசுகையில், ஆஸ்திரேலியாவிலிருந்து தாய்நாடு திருப்பி அனுப்பப்படும் 14 மலேயா மாலுமிகள் அனுப்பப்படமாட்டார்களென்று வதந்தியை மறுத்துக் கூறினார். அத்துடன் இந்த 14 மலேயா மாலுமிகளும் ஆஸ்திரேலிய பெண்களை விவாகம் செய்கொள்ளனர். இவர்களை அரசாங்கம் விரைவிலோ முதலில் செல்லும் கப்பலிலோ அன்றி விமானங்களிலோ தாய்நாடு திருப்பி அனுப்புமென்று மந்திரி தெரிவித்தார்.

இந்த ஏற்பாட்டை கமியூனிஸ்ட் கட்சி மாதிரம் ஆக்ஷேபித்துள்ளது, ஆஸ்திரேலியாவிலிருந்த வெளிநாட்டார் (ஆசிய மக்கள்) சுமார் 4400 பேர் ஏற்கெனவே வெளியேறிவிட்டனர் என்றும் மேலும் 500 சீன மாலுமிகள் விரைவில் அனுப்பப்படுவார்கள் என்றும் மந்திரி தெரிவித்தார்.

(ராய்ட்டர்)

விவசாயப் பண்ணை வேலை நிறுத்தம்

மாஜி ராணுவத்தினர் முகாமை போலீஸ் கைப்பற்றும்

அநுராதபுரம், டிச. 27

பொலன்னறுவை விலுள்ள மாஜி ராணுவத்தினர் விவசாயப் பண்ணை முகாமை கைப்பற்றுமபடி இங்குள்ள போலீஸுக்கு உத்திரவு கிடைத்திருப்பதாகத் தெரிகிறது போலீஸ் உதவி சூப்பரிண்டு திரு ஜி. இ. வான்ரூயனு", இன்று பகல் ஏ லோவனும் ஆயுதப் போலீசாருடன் நேற்று பொலன்னறுவைக்குப் பயணமானார்கள். முகாமிலுள்ள அதிகாரிகளால், வேலைநிறுத்தம் செய்யும் மாஜி ராணுவத்தினர் குழப்பத்தை சமாளிக்க முடியவில்லை. ஒரு வாரமாக வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. வேலை நிறுத்தம் செய்யும் மாஜி ராணுவத்தினர் சிலர் முகாமை விட்டு வெளியே போய்விட்டார்கள். வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் வெளியேறாது வேலை நிறுத்தம் செய்யும் 800 பேர்களுடன் தங்கியிருக்கிறார்கள்.

இலங்கை சர்வகலாசாலை பௌத்த மயமாகும்

பத்து லட்ச ரூபாய் நிதி திரட்டப்படுகிறது

கொழும்பு டிச 28

இலங்கை சர்வகலாசாலை மாணவர்களிடையே பௌத்த மதப்பண்பையும் பௌத்த வழிபாட்டையும் பரவச்செய்வதற்காக ஒரு சங்கிரமத்தையும் விஹாரையையும் நிறுவ திரு டி. ஆர். விஜயவர்தனா 1947 ஜனவரி மாதம் 28-ந் தேதி பன்று ஒரு தர்ம ஸ்தாபனத்தை ஏற்படுத்தியுள்ளார், பேராதனியாவில் சர்வகலாசாலை எல்லையில் இவை நிறுவப்படும் இதற்காக அவர் இரண்டரை லட்ச ரூபாய் நன்கொடையாக அளித்திருக்கிறார். இத்தர்ம ஸ்தாபனத்திற்கு 10 லட்ச ரூபாய் நிதி திரட்டப்படுமென்றும் நவம்பர் 30-ந் தேதி முடிய இரு நாள் ஜனங்களிடமிருந்து ரூ. 5516-30 வசூலாகியிருக்கிறது.

மால தீவு கப்பலில் தீ விபத்து

கொழும்பு, டிச. 28

மாலதீவு அரசாங்கத்திற்கு சாமான்களை ஏற்றிச் சென்ற மாலதீவு கப்பலில் நேற்று பகல் 2 மணிக்கு தீப்பிடித்துக்கொண்டது. தீயணைக்கும் படகு 'போயனிகஸ்' தீயை அணைத்தது. சேதம் அதிகமில்லை.

இலங்கை சுதந்திர தினம்

அரசியல் கைதிகளை விடுதலை செய்க

கண்டி, டிச. 27

கமியூனிஸ்ட் கட்சி சார்பில் இங்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது, அப்பொழுது திரு ஜே. ராமநாயகா பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:-

சுதந்திர தினத்தன்று இந்தியா, அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பளித்து விடுதலை செய்தது.

அதேபோன்று இலங்கையும் சுதந்திர தினத்தன்று அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் கூட்டத்திற்குத் தலைமை வகித்த செனட்டர் எல். ஏ. ஜெயசேனா பேசியபோது, சமீபத்தில் தண்டனை பெற்ற பாராளுமன்ற அங்கத்தினர் திரு. எச். அபயகுணவர்த்தனா, கொழும்பு நகர சபை அங்கத்தினர் திரு எம் ஜி. மெண்டிஸ் முதலிய கமியூனிஸ்ட் கட்சி அரசியல் கைதிகளுக்கு விடுதலை செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உதவி லிகிதர்

ஜனவரி 8-ம் தேதி திரும்புகிறார்

கொழும்பு, டிச. 28

இலங்கையின் புதிய பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கும்பொருட்டு இங்கு நவம்பர் 19-ம் தேதி வந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற உதவி லிகிதர் திரு. இ. ஏ. பெல்லோவெஸ் மேற்பகுதியில் விடுமுறை நாட்களைக் கழிக்கச் சென்றிருக்கிறார். அவர் இன்னுமொரு மாதம் 8-ம் தேதி லண்டனுக்குத் திரும்புவார்.

கோரமான பஸ் விபத்து

21 பேர்கள் காயமடைந்தனர்

கொழும்பு, டிச 28

அத்துருகிரியா போலீஸ் வட்டாரத்தைச்சேர்ந்த கொள்வதை என்னுமிடத்தில் கோரமான பஸ் விபத்து ஏற்பட்டது. அவ் விபத்தில் 21 பேர்கள் காயமடைந்தனர். இருவர் நிலைமை அபாயகரமாக இருக்கிறது. 7 பேர்கள் நேற்று ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

டாக்டர் குமாரன் ரத்னம்

மேயர் பதவிக்குப் போட்டியிடுவார்

கொழும்பு, டிச. 28

கொழும்பு நகர சபையின் கும்பனிக்கதெரு அங்கத்தினரான டாக்டர் குமாரன் ரத்னம் ஜனவரி மாதம் நடைபெறும் மேயர் தேர்தலில் போட்டியிடுவார். திரு. ஆர். எப். எஸ். டி மெல், (இப்பொழுதுள்ள மேயர்) திரு. ஆர். துரைசாமி ஆகியோரும் மேயர் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்று தெரிகிறது. தேர்தல் ஜனவரி 12-ந் தேதி நடைபெறும் புதிய மேயர்பதவி வாரிசு மேயர் பதவி பார்க்கப் படக் கூடுமாதலால் போட்டி பலமாக இருக்கும்.

பெருமழையால் 3 கோடி பவுண் நஷ்டம்

சிட்னி, டிச 27

ஆஸ்திரேலியாவில் நியூ சௌத வேல்ஸ மாகாணத்தில் நவம்பர் 4-ம் தேதி முதல் 8 வார காலம் பெய்த கனத்த மழையின் காரணமாக 3 கோடி பவுண் வரை சேதமேற்பட்டுள்ளது. கோதுமை விளைச்சல், நிலக்கரி உற்பத்தி முதலியன பெரு நஷ்டமடைந்தன.

இந்திய குமாஸ்தாக்களையும் இலங்கை வருவதை கட்டுப்படுத்த கூடுமாதலால், வர்த்தக ஸ்தாபனங்கள் குறிப்பிட்ட அளவுக்கு இலங்கையர் மூலதனத்தையும் இலங்கை குமாஸ்தாக்களையும் உபயோகிக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் சட்டம் இயற்றப்பட வேண்டிய அவசியம் இல்லை இலங்கையில் மற்ற நாடவருக்கு அளிக்கப்படும் எல்லா உரிமைகளும் இந்தியர்களுக்கும் அளிக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

வெண்ணெய் உருகிவிடும், சீனிச்சம்பல் புளித்துப்போம்

யூ.என்.பி. கட்சிக்கும் அக்கதியே ஏற்படும்

அரசாங்கக் கட்சிக்கு எதிராகப் பேசிய யூ. என். பி. அங்கத்தினர்

சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த "சிங்கள ஜாதிய" எழுதியிருக்கும் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

பார்லிமெண்டில் அங்கத்தவம் வகிப்பதையும், மந்திரிசபையில் உயர்கர பதவிகள் வகிப்பதையும், இன்றைய யூ. என் பி அரசாங்கம் ஒரு உயர்தர ஜீவனோபாயத் தொழிலாக கொண்டிருக்கிறது என்று சொல்லுவது குற்றமாகாது தேசத்தில் பொருளாதார நிலைமை ஆட்டம் கொடுக்துக் கொண்டிருக்கையில் தங்களுக்கு வேண்டியமட்டும் சமபளத்தை மாக்கிரம் அதிகரித்து இருப்பதிலிருந்து இவர்களுடையநோக்கம்என்னவென்பது நன்கு புலனாகின்றது.

எப்படியும கட்சி முறையினபடி சுயேச்சை அங்கத்தினர்கள் உள்ளிட்டு அரசாங்கக் கட்சியில் உயர்பதவி வகிப்பவர்களின் தொகை 45 பேர்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்று கருதப்படுகிறது. இத்தொகையில் 14 மந்திரிப் பதவிகள உள்ளடங்கியிருக்கிறது. ஒவ்வொரு மந்திரியும் சுமார் 2000 ரூபாய் மாதமொன்றுக்கு பொதுப் பணத்திலிருந்து பெறக் கூடியதாய் இருக்கிறது பிரதம மந்திரி விஷயமோ தலைக்குமேல், விலையுயர்ந்த காரென்ன-பெரிய மாளிகைகளென்ன? பாதுகாப்பென்ன? சர்வமும் பூர்ணமாய் இருக்கிறது. பார்லிமெண்டுக் காரியதரிசிகள் 12 பேர்கள் இவர்களுக்கும் மாத மொன்றுக்கு 1000 ரூபாய் சம்பளம். பார்லிமெண்டுத் தலைவர் உப தலைவர் போக, ஒவ்வொரு மந்திரிக்கும் செந்தகாரியதரிசியுமிருக்கிறார்கள் இவர்கள் மந்திரிகளின் உறவினர்களாய் இருந்தாலும் யாரும் தட்டிக் கேட்க முடியாது. இவர்களுக்கும் மாதமொன்றுக்கு 400 ரூபாய் வீதம் பொதுப் பணத்திலிருந்து கிடைக்கிறது. இவர்களைவிடவோரும் யூ என் பியினர் தான் என்பதை தேச மக்கள மறந்துவிட மாட்டார்கள்.

இன்னும் சிறிது தினங்களில் தேச மக்களை ஏமாற்றுவதற்கு யூ என் பி யினருக்கு நல்லவோர் சந்தர்ப்பம் வருகிறது இந்த சமயத்தில் யூ. என் பியினர் தம் கைவரிசையைக் காட்டுவார்களென்பதில் சந்தேகமில்லை. அதுதான் கிடைக்கப்போகிறதென்று சொல்லப்படும்போலிச்சுதந்திர விழாவாகும். சென்ற சில தினங்களுக்கு முன் ஏழைப் பொது மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் மீது வரியை அதிகரித்திருக்கிற யூ. என். பி அரசாங்கம் போலிச் சுதந்திர எழுகொண்டாட்டத்திற்காக செலவிடுவதற்கு பொதுப்பணத்தில 8 லட்சம் ரூ. செலவுசெய்யத் தீர்மானித்தது.

இவ்வளவு பெருந் தொகையை இவர்கள் செலவுசெய்து தேச மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் ஆறுதல் என்ன? ஒன்றுமேயில்லை. பொதுப் பணத்தில் கொண்டாடப்படும் இந்த சுதந்திர விழாவைக்கூட யூ என் பி. யினர் தமது பிரசார வேலையாகச் செய்வதை தேச மக்கள கண் முனனே காண்பார்கள என்பது நிச்சயம். அன்றைக்கு சிங்களக் கொடியெனன? கைத்தாளக்காரர்களென்ன? சொறபொழிவுகள் - விருந்துபசாரங்கள வாணவிளையாட்டுகளர்வலப் பவனி யாவறறிற்கும் எவ்விதக் குறைபுமே இராது இவைறய தினம மாதசிரப்பந்தி-ஆரவாரங்களையும் வேடிக்கைகளையும பார்த்துவிட்டு பொது மக்கள் வாயையும் வயிற்றையும் கட்டிக்கொண்டு கம்மா இருந்து விடுவார்களென்று எண்ணுவது சந்தேகம். யூ. என். பி. அரசாங்கத்தின் நிர்வாக அலங்கோலத்தைக்கண்டு பொது மக்கள் கொண்டிருக்கும் வெறுப்பிற்கு அளவேயில்லை. இந்த மாதிரியான ஏமாற்று நாடகங்களைக் கண்டு தேசமக்கள் இனியேனும் வாழாவிருப்பார்களென்று யூ என். பி. அரசாங்கம் எண்ணுமானால் அதைவிட முட்டாள்தனம் வேறில்லை.

* * *

சில தினங்களுக்கு முன் யூ என். பி. வட்டாரத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. இதற்கு காரணம், திரு. சைமன் அபயவிக்கிரம சில தினங்களுக்கு முன் அரசாங்கக் கட்சிக்கு எதிராகப் பார்லிமெண்டில் பேசினதேயாகும். இந்த அமளிதுமளி கடந்து விடாதபடி திரு சேனநாயக்கா தடுத்து விட்டாராம் திரு சேனநாயக்கா எனனதான் பாடுபட்டாலும் யூ என். பி இன்னும் சில தினங்களில் இருந்த விடம் தெரியாமல் போய்விடுமென்று அங்கே நடக்கும் விஷயங்களிலிருந்து தெரிகிறது.

பட்டர், ரோகிகளுக்கு அத்தியாவசியமான ஆகாரமல்லவென்று டாக்டர் நீமல் குரிய சொன்னது சிரிப்புக்கு இடமாய் இருக்கிறதெனினும், இவர் கூற்றில் சுந்தரலிங்கம் அய்யாவும் திரு ஜயவர்த்தனவும் ஏமாந்து விட்டதாகத் தெரிகிறது பட்டருக்கு-வெண்ணெய்க்கு-பொக்கிஷ மந்திரி வரியை அதிகரித்ததார். சுந்தரலிங்கம் அய்யா பட்டரிலுள்ள பார்க்க சீனிச் சம்பல் திறமென்று சிபார்சு செய்திருக்கிறார் இவர்களிருவரின தம் அபிப்பிராயம் உண்மைதான். பட்டரை குளிர்ந்தவிடத்தில் பாதுகாக்காவிட்டால் உருகிவிடும். சீனிச் சம்பல் சில நாள் சென்றதும் புளித்துவிடும். இப்படிச் தான் யூ என். பி. கட்சியென்று இவ்விரு மந்திரிகளும் பொது மக்களுக்கு சொல்லாமல் சொல்லிவிடுக்கிறார்கள்.

இந்தியாவுக்கு நேபாளத்திலிருந்து அரிசி

20 லட்சம் மணங்கு அனுப்ப சம்மதம்

இந்திய தூதுகோஷ்டி ஒப்பந்தத்தின் பலன்

புதுடில்லி, டிச. 27

நேபாள சர்க்காருக்கும், இந்திய கோஷ்டிக்கும் இடையில் எற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக நேபாள சர்க்கார் 20 லட்சம் மணங்கு நெல் இந்தியாவுக்கு அனுப்ப சம்மதித்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டுவர நேபாள சர்க்கார் நேபாளத்திலுள்ள அரிசி நெல் கையிருப்பை எல்லாம் முடக்கி வைத்திருக்கிறதனர். நேபாளத்துக்கு வெளியிலுள்ள பிரதேசத்தில் இது சம்பந்தப்பட்ட வர்த்தகத்துக்கு தடை செய்யப்பட்டிருக்கிறது.

அ. இ. ஹிந்து மகாநாடு கூட்டும் யோசனை

திருப்பதி தேவஸ்தான கமிட்டி முடிவு

திருப்பதி, டிச. 27

தேவஸ்தான ஆதரவில் வருஷந்தோறும் அ. இ. ஹிந்து மகாநாடு கூட்ட வேண்டுமென ஸ்ரீ குன் ஹன் ராஜா கூறிய யோசனையை திருமலை-திருப்பதி தேவஸ்தானக் கமிட்டி பரிசீலனை செய்தது. இவ்விஷயத்தை ஒரு விசேஷ கமிட்டிக்கு விடுவதென முடிவு செய்யப்பட்டது.

ஹிந்து பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு வேதபுராண வஷயங்களில் பயிற்சி அளிக்க வேண்டும் எனவும் ஸ்ரீ குன் ஹன் ராஜா யோசனை கூறியிருக்கிறார்.

பிரிட்டனுக்கு ரஷியாவின் உணவு

ஏழரை லட்சம் டன் தான்யம் உதவும

ஆங்கிலோ-சோவியத் வர்த்தக ஒப்பந்தம்

லண்டன், டிச. 27

பிரிட்டனுக்கும் ரஷியாவுக்குமிடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. நேற்றிரவு மாஸ்கோவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுவிட்டது. பிரிட்டிஷ் தூது கோஷ்டி நாளை மாஸ்கோவிலிருந்து திரும்பும். இந்த ஒப்பந்தம் குறுகிய கால ஒப்பந்தமாகும். அதன்படி ஜனவரி மாதம் முதல் கருங்கடல் துறைமுகங்களிலிருந்து ரஷியா ஏழரை லட்சம் டன் உணவு தான்யத்தை பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யும். அதற்குப் பதிலாக பிரிட்டன் யந்திரக் கருவிகளை ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்யும். இனி நீண்டகால வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள பின்னர் சம்பாஷணை நடைபெறும்.

பாரீசு நெருக்கடி

ரஷியா உறவை முறித்துக்கொள்ளும்

பாரிஸ், டிச. 27

பாரீசுக்கத்தில் ஹக்கிமி புதிய பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதையும் உடனே பாரீசுக்கத்திலிருந்து ரஷிய ஸதானிகர் தனி விமானத்தில் ரஷியாவுக்குப் புறப்பட்டுச் சென்றதையும் கவனிக்கு மிடத்து பாரீசுகத்துடன் ரஷியா ஸதானிக உறவை ரத்துச்செய்யுமென்று தெரிவதாக பிரஞ்சு பத்திரிகை எழுதுகிறது.

பாரீசுக-அமெரிக்க ராணுவ ஒப்பந்தத்தை பாரீசுக பாராளுமன்ற அங்கத்தினர்கள் ஆட்சேபிப்பது கண்டு தான் ஆச்சரியப்படுவதாக பாரீசுகத்திலுள்ள அமெரிக்க ஸதானிகர் தெரிவித்தார்.

டில்லியிலிருந்து புறப்பட்டு மாஸ்கோ செல்லும் இந்திய ஸதானாதிபதி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் டெஹ்ரான நகரில் 24 மணி நேரம் தங்கிச்செல்வார்.

பாரீசுகத்தில் பாகிஸ்தான் ஸதானிகராக இருக்கும்சையது ஹுசைன் அளித்த வரவேற்விருந்துக்கு பாரீசுப் பிரதம மந்திரியும் பாரீசுபாராளுமன்ற தலைவரும் விஜயம் செய்திருந்தனர்.

இந்தியரின் பொறுமையை உலக மக்கள் பாராட்டுகின்றனர்

இந்திய பொருளாதார சமூக அபிவிருத்தி அவசியம்

டில்லியில் ஸ்ரீ வி. கே. மேனன் சொற்பொழிவு

புதுடில்லி, டிச. 27

"இந்தியத் தலைவர்கள் சாதித்துள்ளதும், இந்திய மக்கள் காட்டி வந்த பொறுமையும், தெரியமும், நான் சென்ற ஒவ்வொரு நாட்டின் ராஜதந்திரிகளிடமிருந்தும், பொது ஜனங்களிடமிருந்தும் பாராட்டும், மரியாதையும் பெற்றுள்ளன. இவை விலை மதிக்கமுடியாத சொத்தாகும். ஆகையால் இச்சொத்தை நன்றாக அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும்" என்று பிரிட்டனில் இந்திய ஹைகமிஷனராகவிருக்கும் ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன், ஓ. ரம். ஸி. ஏ. யில கிருஷ்ணமலை கொண்டாட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் சொன்னதாவது:-

இந்தப் பொது அனுதாபமும், நல்லெண்ணமும் இல்லாவிடில் நமது கடமைகள் மிகவும் கடினமாகவிருக்கும் ஆனால் நமது மக்களின் முயற்சி இல்லாமல் அந்நிய நாடுகளின் ஆதரவால் மட்டும் ஒன்றும் நடைபெறாது. ஜாதி, மதம் சமூக வித்தியாசங்களைப் போக்க வேண்டும். இதுதான் மக்களின் முயற்சி, நமது நாடு மதத்தை அடிப்படையாகக் கொள்ளக் கூடாது.

"நமது கஷடங்களின் அளவை நான் குறைத்துக் கூறவில்லை. நமது பேதங்கள், ஒற்றுமைகளைவிட அதிகமாகவருகின்றன வென்று கூட நாம நினைக்கிறோம். ஆனால் விஷயங்களை ஊன்றி கவனித்தால் நமது நாடு முழுவதிலும் சகிப்புத்தன்மை யிருப்பதைக் காண்கிறோம். இது உலகில் வேறு எங்கும காணமுடியாது. இதை அறிந்துளளவர்கள் உலகில் பலர்.

சகிப்புத் தன்மை

நமது சரித்திரம் சகிப்புத்தன்மைக்கு உதாரணமாகவே விளங்குகிறது ஆகையால் சமீப கால நிகழ்ச்சிகள் எல்லாம் தற்காலிகமானதே. சமூகத்தைத் திருத்தியமைக்கும் பிரச்னைகள் சம்பந்தமான போராட்டம் இந்த வகுப்புப் பூசலை திருமணமாக்கிவிடும்.

செல்வ உற்பத்திக்காரர்கள்

"செல்வ உறபததிக்காரர்களான உலகிலுள்ள தொழிலாளர்கள், எதிர்கால நிர்ணயத்தில் தங்களுடைய பங்கை ஞாயமாகத்தான் கேட்பார்கள். இந்த கோரிக்கையை, எந்த நாட்டிலாவது அதன அரசியல் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள் அலட்சியம செய்வார்களேயானால், அது தன் தலையில் தானே மண்ணைப்போட்டுக் கொளவதற் கொப்பாகும். ஆகையால் ஜனநாயகம் என்ற முறையை சமூக, பொருளாதார கைதொழில் துறைகளில் பரப்புவதற்கான வழிகளை இந்தியர்கள் கண்டுபிடிக்க வேண்டும். இதைச் செய்யத்தவறினால் நமது பொருளாதார அமைப்பு சீர்குலைந்து போய் உலகில் உயிர் வாழவே முடியாமலாகிவிடும்.

ராணுவ பலமும் வேண்டும்

பொருளாதார, கைத்தொழில் துறைகளிலும், ஏன் ராணுவத்துறைகளிலும்கூட, நாம பலம பொருந்தியவர்களாகத் தான் வேண்டுமென்ற உண்மை உணர்ந்தே தீர வேண்டும் ஆனால் இந்த பலம் பொது மக்களையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

காயங்களை ஆற்றுக

"நம் மீது படடுளள காயங்களை ஆற்றுவதே இன்று நாம ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமை. நமது மக்களுக்கடையில் துவேஷததைவளரத்தக் கூடாது: நமது நாட்டின் எதிர்காலம், அகில உலகின் சுபிக்ஷத்துடன் பிணைததிருக்கிறதென்பதை உணரவேண்டும் அப்படியிருக்கையில நமது அண்டைக்காரர்களை வாக்குகளினாலோ செய்கைகளினாலோ துன்புறுத்தவது ஆபத்தாகும்.

"வாலிபர்கள் இயக்கத்தில் வாலிபர்கள் சேரவேண்டும். அவைகளில் எதிர்காலததிற்கான நமபிக்கையுண்டு.

பிரிட்டிஷ் வாபஸ

"அதி தீவிர இடதுசாரிக்காரர்கள-இன்னும ஒரு அடி எடுததுவைததால் வலதுசாரிக்கு வந்துவிடக்கூடும் (சிரிபபு) பிரிட்டிஷ் சாம்ராஜய அதிகாரம் இந்த நாட்டை விட்டு வாபஸ் ஆயிற்றென்று நமப மறுக்கிறார்கள். ஒருக்கால் சாமராஜய ஆடசியினால் ஏற்பட்ட வடுக்கள் இனனும காணப்படுவதுதான் காரணமாயிருக்கலாம் ஆனால் பிரிட்டிஷ் ஆடசி வாபஸானது வாள்தவமே, பிரிட்டனின் கொள்கையே மாறிவிட்டது. ஆகையால் நமது கஷடங்களை பிரிட்டன் பயனபடுததிக் கொள்ள யத்தனிககிறதெனபது சரியல்ல."

பேய்த்தோற்றமடைந்த நியூயார்க் நகரம்

அமெரிக்காவில் பனிப் புயல் கொடுமை

போக்குவரத்துகள் ஸ்தம்பித்துவிட்டன

இறிசுமஸ் தினத்தில் கிலேசசம்பவங்கள்

நியூயார்க், டிச 27

இன்று நியூயார்க் நகரம் பேய்த் தோற்றமாக இருந்தது. பனிப் புயலடிததது ஏராளமான பனி விழுந்ததால் ரஸ்தாக்கள் எலலாம் பனிக் கட்டியாலமூடப்பட்டன. இதுவரை இட்படிப்பட்ட பனி பெய்ததில்லை. பனியில் புதையுண்ட நகரை பனியிலிருந்து தோண்டி எடுக்க பெரும் முயற்சி நடைபெற்றது. பனிக் கட்டிகளை அப்புறப்படுததத மட்டும் 30 லட்சம் டாலர் செலவாகும். பனிப் புயலால் ஏற்பட்ட விபத்துக்களில குறைந்த பட்சம் 26 பேர்கள் மாண்டிருப்பார்கள் என்று தெரிகிறது. நியூயார்க்கில் தற்சமயம் பனி பெய்வது நின்றுவிட்டபோதிலும் அமெரிக்காவில் இதர இடங்களில் இனனும் பனி பெய்துகொண்டிருக்கிறது.

மோட்டார்கள் போக முடியாததால் நியூயார்க் பததிரிகைகள் பாதாள ரயில்பாதை மூலம் விநியோகிக்கப்பட்டன. பனிக்கட்டிச் சுமையைத் தாங்க முடியாது ஒரு சினிமா கொட்டகை சரிந்து விழுந்ததால் ஜனங்கள் புதையுண்டனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செலலப்பட்டனர். கிறிஸ்மஸ் தினத்தில் குப்பைகதொட்டிகள் எலலாம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தபடியால் நகரெங்கும் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன. 2000 பஸகள் இருக்குமிடந் தெரியவில்லை. பனியினகுளிரால் மோட்டார்காரர்கள் ஓட முடியாது போனதால் பிரசவிக்கும் தாய்மார்களை குதிரை வண்டிகளில் ஏற்றி ஆஸ்பததிரிகளுக்குக் கொண்டு செலறனர் விமான நிலையங்களில் விமானங்கள் இறங்க முடியாது போய்விட்டன. விமான நிலையங்களிலிருந்து பிரயாணிகள் ஹோட்டலுககு போக முடியாதிருந்ததால் அவர்கள் இரவெல்லாம் விமான நிலையத்திலேயே தங்கியிருந்தனர். போக்குவரத்துகள் யாவும ஸ்தம்பிததுப் போகவே பிரயாணிகள் ரயில்வண்டிக்குள்ளும் ரயில்வே ஸ்டேஷன்களிலும் பஸ நிலையங்களிலும் இரவைக் கழிததனர். அமெரிக்காவில் இதர பாகங்களில் 35 பேர்கள் மாண்டனர். முக்கிய பொருட்களை ஏற்றிச் செலல ராணுவ ஆம்புலன்ஸ மோடடா கார்கள் உபயோகிக்கப்பட்டன.

அன்னும் மாஜி மன்னர் லண்டன் பயணம்

கராச்சியில் நிருபர் பேட்டி

லண்டன், டிச. 27

புதுடில்லி ரேடியோ அறிவிப்பதாவது:- ஹாங்காங்கில் தேசப்பிரஷ்ட வாழ்க்கை நடததிவரும் அன்னும் மாஜி மன்னர் பாவோடாய் லண்டனுக்குப் போகிறார். கராச்சியில் அவரை பததிரிகா நிருபர் பேட்டிகண்டபோது பின்வருமாறு தெரிவிததார்:-

"இந்தோ சைனா விவகாரம் சம்பந்தமாக என்னிடம் நிச்சயமான திட்டமெதுவுமில்லை கண் வைத்தியத்திற்காகப் புறப்படடுச் செல்கிறேன். பிரஞ்சு அதிகாரிகள் விருப்பமிருந்தால் இந்தோ சைனா சம்பந்தமாக அவர்கள் என்னை லண்டனிலோ அல்லது சுவிட்ஜர்லாந்திலோ சந்தித்துப் பேசுவார்களானால் ஏற்கனவே அது சம்பந்தமாக இந்தோ சைனாவிலுள்ள பிரஞ்சு ஹைகமிஷனரைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன்."

பிரிட்டிஷ் மன்னரின் வைத்தியர் மரணம்

லண்டன், டிச 27

பிரிட்டிஷ் மன்னரின் அரண்மனை வைததியர் மேஜர் ஜெனரல் எட்கார் மாண்டேக் பில்சர் 82-வது வயதில் இன்று ஆஷ்டட நகரிலுள்ள தனது இலலததில் காலமானார். இவர் இந்தியாவில்மீரத நகரில் பிறந்தவர்.

லட்சுமணபுரியில் இந்திய யூனியன் முஸ்லிம் மகாநாடு

காங்கிரஸில் சேர மௌலானா அபுல்கலாம்ஆசாத்வேண்டுகோள்

மேஜர் ஜெனரல் தாபர் இந்திய ராணுவ சபைத் தலைவரானார்

ஜம்முவுக்கு சர்தார் படேல் விஜயம்; டில்லியில் ஹைதராபாத் ஏஜெண்டு ஜெனரல்

லட்சுமணபுரி, டிச 27

இங்கு இன்று இந்திய யூனியன் முஸ்லிம் மகாநாடு ஆரம்பமாயிற்று. இந்தியா வெங்குமிருந்து 60 ஆயிரம் முஸ்லிம்கள வந்திருந்தனர். ஏராளமான முஸ்லிம் லீகர்களும் வந்திருந்தார்கள. மகாநாட்டுக்குத் தலைமை வகிக்த மௌலானா அபுல்கலாம் ஆசாத் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

அகில இந்திய முஸ்லிம் லீகலைக்கப்பட வேண்டும் வகுப்புவாத ஸ்தாபனம் இருக்கலாகாது. வகுப்புவாத ஸ்தாபனம் பேராபத்தைவிளைவிக்கும். நாடுன் அரசியல் வாழ்க்கையில வகுப்புவாத ஸ்தாபனததிற்கு இடமே கிடையாது. ஆகலால இந்திய யூனியனிலுள்ள எல்லா முஸலிம்களும் காங்கிரசில் சேர வேண்டும்.

மௌலானாவின் தலைமைப்பிரசங்கததை எலலோரும் மிகவும் அமைதியாக இருந்து கூர்மையாக செவிசாய்ததுக் கேட்டனர். பிரசங்கம் ஆரம்பததிலிருந்து முடிவுவரை மகாநாட்டுல் நிசப்தம் குடிகொண்டிருந்தது. வகுப்பு வாதகததை மௌலானா மிகவும் பலமாகக் கண்டததுப் பேசினார்.

இந்திய ராணுவத் தலைவர்

புதுடில்லி, டிச. 27

இந்திய ராணுவ சபைத் தலைவரான மேஜர் ஜெனரல் கே. எம். காரியப்பா கிழக்கு வட்டார ராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருப்பதால் அவரது ஸதானத்தில் மேஜர் ஜெனரல் அந்தஸதுடன் பிரிகாடியர் ஜி. என். தாபர் தற்காலிக இந்திய ராணுவ சபைத் தலைவராக நியமிக்கபபட்டிருக்கிறார்.

சென்னை வட்டாரத் தளபதி

சென்னை, டிச. 27

சென்னை வட்டாரத் திற்கு தளபதியாகநியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சாந்தநிய நேற்றுமாலை டில்லியிலிருந்து விமானத்தில் வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் ராணுவ அதிகாரிகள் சென்று அவரை வரவேற்றனர்.

நிதி மந்திரி ஷண்முகம்

இந்தியா நிதி மந்திரி ஆர். கே. ஷண்முகம் செட்டியார் நேற்று சென்னையிலிருந்து விமானத்தில் கோயமுததூருக்குப் பயணமானார். அவர் ஜனவரி 3-ம தேதி சென்னைக்கு திரும்பி 4-ம தேதி டில்லிக்குப் பயணமாவார்.

சுகாதார மந்திரி விஜயம்

அகில இந்திய மாதர் மகாநாட்டில் கலந்துகொள்ள இந்திய சுகாதார மந்திரி ஸ்ரீமதி அமிர்தகௌரி இன்று டில்லியிலிருந்து விமானததில் சென்னைவந்திறங்கினார். சென்னை சுகாதார இலாகா அதிகாரிகளும பிரபல மாதர்களும் அவரை விமான நிலையததில் வரவேற்றனர். அவர் சென்னை அரசாங்க மாளிகையில் தங்கியிருக்கிறார்.

அகில இந்தியர் மாதர் மகாநாட்டுக்கு 100 பிரதிநிதிகள் வரை சென்னைக்கு வந்துவிட்டனர். அவர்கள் க்வீன் மேரி கல்லூரி, லேடி வெலிங்டன் கல்லூரி ஆகிய இடங்களில் அமைக்கப்படடுள்ள முகாம்களில் தங்கியிருக்கிறார்கள் டிசம்பர் 28-ம் தேதி மகாநாடு ஆரம்பமாகும்.

லஞ்சப் பேயை ஒழிக்க முயற்சி

சென்னை அரசாங்க இலாகாக்களில் தாண்டவமாடும் லஞ்ச ஊழல்களை ஒழிப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி அறிக்கை தயாரித்து வருகிறார்கள். அடுத்த மாதம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அக்கமிட்டித் தலைவர் நீதிபதி திரு. பி. வி. ராஜமன்னார்.

வெடி மருந்து ரயில்வண்டி தீப்பற்றியது

விசாகபட்டணம், டிச. 27

பி. என். ரயில்வேயில் 29 வாகன்களில் வெடி மருந்துப் பெட்டிகளை ஏற்றி வந்த ரயில் வண்டியில் ஒரு வாகனில தீப்பற்றியதால் ஏற்பட்ட விபத்தில ரயில் பாதையும் தந்திக் கம்பியும் சேதமடைந்து ரயில் போகக வரதது தடைப்பட்டது. மிலிட்டரி ஸ்டோரிலிருந்து அவ் வெடிமருந்துப்பெட்டிகளை ஏற்றி வந்த அந்த ரயில் விசாகபட்டணததிற்கும் வால்டயருக்குமிடையே கண்டகபள்ளி ஸ்டேஷனருகே விபத்துக்குள்ளாகியது. மற்ற வாகன்கள் உடனே கழற்றப்பட்டுவிட்டன. கிராமவாசிகள் வெளியேற்றப்பட்டனர். 900 வெடி மருந்துப் பெட்டிகள் வெடித்து நெருப்பைக் கக்கின. பலமான அதிர்ச்சியுமேற்பட்டது. போலீஸ அதிகாரிகள் அவ்விடத்திற்கு விரைந்து சென்றார்கள்.

காஷ்மீர்

புதுடில்லி, டிச. 27

காஷ்மீரில் இடைக்கால சர்க்காரை ஏற்படுதத சர்தார் படேல் நாளை காலை ஜம்முவுக்குப் பயணமாகிறார்.

இந்திய விமானப்படை வெடிகுண்டுகளைப் பொழிந்து மீர்பூருக்கருகேயுள்ள எதிரிகளின் தலைமைக் காரியாலயத்தைத் தாக்கி பெருத்த சேதம் விளைவித்தது.

ஹைதராபாத் ஏஜெண்டு ஜெனரல்

ஹைதராபாத், டிச. 27

ஹைதராபாத் சமஸ்தான சர்க்காரில் உதவி பிரதம மந்திரியாக இருந்தவரான ஜெயின் பாரஜங் பகதூர் புதுடில்லியில் ஹைதராபாதின் ஏஜெண்டு ஜெனரலாக நியமிக்கபபட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் அந்நியநாட்டு மந்திரி

பாகிஸ்தான், டிச. 27

சர் முகமது ஜப்ருல்லாகான் பாகிஸ்தான் சர்க்காரின் அந்நியநாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே பிரதம மந்திரி லியாகத அலிகானுக்கு அந்நியநாட்டு மந்திரி பதவி நீங்கிற்று. இப்பொழுது பாகிஸ்தான் மந்திரி சபையில் மொத்தம் 8 மந்திரிகளிருக்கிறார்கள்.

அமெரிக்கா ஆட்டிவைக்கும் நாடு

பாரீசும் பற்றி ரஷியாவின் கருத்து

லண்டன், டிச 28

அக்டோபர் 6-ம் தேதி செய்யப்பட்ட அமெரிக்க பாரீசு ராணுவ ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ், தருக்கியைபோல பாரீசும் அமெரிக்கா ஆடடிவைக்கும் நாடாகிவிட்டதென்று சோவியத் ரேடியோ விமர்சகர் இன்று ஆங்கிலத்தில் மாஸ்கோ ரேடியோ மூலம அறிவித்தார்.

இத்தாலி புதிய அரசியல் திட்டம்

ஜனவரி முதல் தேதி அமுல்

ரோமாபுரி, டிச 27

இத்தாலியின் புதிய அரசியல் திட்டம ஜனவரி முதல தேதி அமுலசெயயப்படும். இப் புதிய திட்டததின்படி 280 அங்கத்தினர்களையும் 6 வருட ஆயுளுமுள்ள செனெட் சபையும், 5 வருட ஆயுளும் 800 அங்கத்தினர்களையுமுடைய பாராளுமன்றமும் அமைக்கப்படும். ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதர்-அராபியர் யுத்தம்

பாலஸ்தீனப் போராட்டம்

மலேயா முஸ்லிம்கள் கோரிக்கை

ஜெருசலேம், டிச. 27

ஜெருசலேமில் பிரங்கி யுத்தங்கள் நடைபெறுகின்றன. ஒலிவமலைப் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்தை யூதர்கள் தாக்கினார்கள். பிரிட்டிஷ் துருப்புக்கள் மும்முரமாக ஜெருசலேம் வீதிகளை பாதுகாவல் புரிந்து வருகிறார்கள். வட பாலஸ்தீனத்தில் அராபிய கொரில்லாக்கள் 13 யூதர்களைக் கொன்றனர். மத்தியதரைக் கடலையடுத்த பாலஸ்தீனக் கரையில் யூதர்களுக்கும் அராபியர்களுக்குமிடையே யுத்தம் நடைபெறுகிறது. ஹைபா நகரில் இரு பிரிட்டிஷார் கொல்லப்பட்டனர்.

மலேயா முஸ்லிம்கள் கோரிக்கை

சிங்கப்பூர், டிச. 26

இன்று இங்கு இருந்த முஸ்லிம்களும் மலேயா முஸ்லிம்களுமாக 4000 பேர்களடங்கிய பொதுக்கூட்டத்தில் பாலஸ்தீன அராபியர்களை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆங்கிலம், மலாய், ஹிந்துஸ்தானி, அராபிய பாஷைகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

துருக்கி வரவுசெலவு திட்டத்தில் துண்டுவிழுகிறது

இதற்கு உள்நாட்டு கடன் உதவுமாம்

அங்காரா, டிச. 29

துருக்கிய பாராளுமன்றத்திலே வரவு செலவுத் திட்ட வாதம் ஆரம்பித்தபோது நிதி மந்திரி ஹாலிட்நாஸம் கொமிர் பேசுகையில் அமெரிக்காவுடன் பொருளாதாரத் தரையில் ஒத்துழைப்பு அவசியமென்றும் இதுவரையும் அமெரிக்க உதவியுடன் துருக்கி பல வகையிலும் முன்னேறியுள்ளதென்றும் உற்பத்தியைப் பொதுவாக அதிகரிக்க ஒரு சிறு திட்டம் துருக்கியிடம் இருக்கிறதென்றும் ஆனால் இந்தத் திட்டம் நிறைவேற்றத்திற்கு நீண்ட கால வெளிநாட்டுக் கடன் உதவியைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருப்பதாகவும் பட்ஜெட்டில் துண்டுவிழும் தொகை உள்நாட்டுக் கடன் மூலம் சரிசெய்யப்படலாமென்றும் கூறினார். (ராய்ட்டர்)

கோமகனின் இலங்கை விஜயம்

நிகழ்ச்சி அட்டவணை

கொழும்பு, டிச. 28

கிளாஸ்டர் கோமகனும் கோமகளும் பெப்ரவரி 8-ம் தேதி இலங்கை வருவார்கள் எனத் தெரிகிறது. அவர்களது இலங்கைச் சுற்றுப்பிரயாண விபரங்கள் பின்வருமாறு:-

பெப்ரவரி 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக விமான நிலையத்தில் இறங்கி ராணிமாளிகைக்குச் செல்வர்.

9-ம் தேதி மாலை ராணிமாளிகையில் வரவேற்பளிக்கப்படும்.

பெப்ரவரி 10-ம் தேதி பாராளுமன்ற திறப்புவிழாவைநடத்துவதோடு பிரதமரின் வரவேற்புபசாரத்தையும் அங்கீகரிப்பர்.

11-ம் தேதி கண்டிப் பிரயாணம்.

12-ம் தேதி பேராதனையில் சர்வகலாசாலை அஸ்திவாரக் கல்லை நாட்டுவார். மாலை அரச மாளிகையில் தேநீர் விருந்து. அதன் பின் ராஜ பொஹராவுக்கு வாணவிளையாட்டுகளும் நடைபெறும்.

1-3ம் தேதி அநுராதபுரிக்குப் இதர சிதையுண்ட புராதன நகரிகளுக்கும் செல்வர்.

14-ம் தேதி கார்மூலம் கொழும்புப் பயணம். 16-ம் தேதி "இலங்கையின் வைபவம்" என்ற பம்பலப்பிட்டி போலிஸ் மைதானக் காட்சிக்கு விஜயம்.

17-ம் தேதி இலங்கையிலிருந்து புறப்பாடு.

"ரப்பர் விலை வீழ்ச்சி, வேலை இல்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கும்"

தோட்டக் குமாஸ்தாக்கள் தலைவரின் எச்சரிக்கை

அரசாங்கப் போக்குக்கு கண்டனம்

பதுளை, டிச. 27

பதுளை நகர மண்டபத்தில் தோட்டக் குமாஸ்தாக்கள் சங்கத்தின் அரை வருஷப் பொதுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. 23 டிஸ்டிரிக்ட் கிளைகளில் இருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

இக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த ஈ. டபிள்யூ. ஏ. சில்வா அவர்கள் ரப்பர் ஷீட் விலை 55 சதமாகக் குறைக்கப்பட்டிருப்பதால் அதிகமான தோட்டங்கள் மூடப்பட்டு அதன் பலனாக வேலையில்லாத் தொல்லை தலைவிரித்தாடலாம் என எச்சரித்தார்.

புதிய வரி விதிதங்கள் பற்றி அவர் பேசுகையில் மத்தியதர வர்க்கத்தினரின் வயிற்றில் அடிப்பதை நிதி மந்திரி தமது கொள்கையாகக் கொண்டு கடமை ஆற்றியுள்ளார் எனக் குறிப்பிட்டு "அந்நியக் குடிவரவு விலை ஏற்றத்தை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் வெண்ணெய்போன்றட்பாஉணவுகளின் வரி விதித்தது மூலம் ஒரு வர்க்கத்தில் மட்டும் தமது வரவுசெலவு ஷரத்துகளை பரீட்சை பார்க்க அவர் முன்வந்துள்ளார்" எனக் கூறலாம். கோட்டங்களில் விலகி இருக்கும் எமக்கு இவ்வுணவுகள் சாதாரணத் தேவையாக இருக்கின்றன. மந்திரியார் வருமானவரியைக் கூட்டுவதற்கு எண்ணவில்லை. இடைபோதுள்ள அரசாங்கம் சோஷலிஸத்தைப் பற்றி அதிக வாய்வீச்சாகப் பேசியபோதிலும் ஏழை மக்களுக்கு நலன்செய்ய முன்வரவில்லை. அவர்கள் கொள்கை பணக்காரரைப் பாதுகாப்பதேயாகும்" எனவும் அவர் கூறினார்.

செனட்டர் எல். பி. ஜயசேன, ஜே. ஆர். செல்லத்தனரை எஸ். டி. ரேய்மன்ட், பி. எம். தர்மசேன முதலியோரும் பேசினர்.

பர்மா-யூனன் எல்லை

ரங்கூன், டிச. 26

பர்மா-யூனன் எல்லையில் பர்மா அரசாங்கம் விசேஷ போலிஸ் படையை நிறுவியிருக்கிறது. சீன மாகாணமாகிய யூனனிலிருந்து கள்ளத்தனமாக சீனர்கள் பர்மாவுக்குள் பிரவேசிப்பதைத் தடை செய்ய இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லையையடுத்த யூனனில் பர்மாவிலிருந்து யூனனுக்குள் கள்ளத்தனமாக அபின் கொண்டு வரப்படுவதைத் தடுக்க சீனத் துருப்புகள் நிறுவப்பட்டிருப்பதாக பர்மா ரோடு வழியாக சீனத்திலிருந்து வரும் யாத்ரீகர்கள் தெரிவிக்கிறார்கள். வட பர்மாவில் 77,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பாமோவை சீனத்துடன் சேர்க்க சீன கோருவதைக் குறித்து பாமோ வாசிகள் பயப்படவில்லை.

"சுத்தப் பொய்"

புடாபெஸ்ட், டிச. 26

ஹாங்கேரி அழைப்பின் மீது சோவியத் துருப்புகள் ஹங்கேரிக்கு வந்திருப்பதாக வெளியான செய்தி சுத்தப் பொய்யென ஹங்கேரி அரசாங்க பிரதிநிதி தெரிவித்தார்.

அமெரிக்கா, பிரிட்டன், ரஷியாவுடன் ஹங்கேரி செய்துள்ள சமாதான உடன்படிக்கையின்படி, ஆஸ்திரியா சமாதான உடன்படிக்கை நிறைவேறும்வரை, ஹங்கேரியில் ரஷியா துருப்புகள் வைத்திருக்க உரிமையுண்டு. செப்டம்பர் 15-ம் தேதிக்குப் பின் பிரிட்டிஷ் அமெரிக்க துருப்புகள் வெளியேறிவிட்டன. ஆஸ்திரியா செல்லும் பாதையைக் காக்க ரஷியா 10,000 துருப்புகளை ஹங்கேரியில் வைத்திருக்கிறது.

இந்தியா - பாகிஸ்தான் சமரசம்

டைம்ஸ் பத்திரிகை கருத்து

லண்டன், டிச. 27

'இந்தியாவின் நிலைமை என்று மகுடமிட்டு 'டைம்ஸ்' பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:- இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை சம்பந்தமாக நிதி முதலிய சகல விஷயங்களிலும் சமரசமான ஒப்பந்தங்கள் ஏற்படுத்த கூட்டுப் பாதுகாப்பு சபை முனைந்திருக்கிறது. இரு நாடுகளின் தலைவர்களும் அடிக்கடி நேரில் சந்தித்து சமரசப் பேச்சுகளில் வெற்றிபெறும் மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதில் கூட்டுப் பாதுகாப்பு சபை சிக்கியுடைந்துள்ளது. காஷ்மீர் பிரச்னையும் சமரசமாக தீர்க்கப்பட்டுவிடவேண்டும்.

காஷ்மீர் போர்

புதுடில்லி, டிச. 26

இந்திய துருப்புகளும் இந்திய விமானப் படையும் குமகார், நவஷாரா பிரதேசத்தில் படையெடுத்துவந்த எதிரிகளுக்குப் பெரும் சேதம் விளைவித்தன.

அகதிகளுக்கு அமெரிக்க உதவி

நியூயார்க், டிச. 26

இந்தியா, பாகிஸ்தான் அகதிகளுக்கு உதவ 'அமெரிக்க பாதிரிமார்கள், உணவுப் பொருள்களும் மருந்துப் பொருட்களும் அனுப்பித்தரும்படி வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்

பாகிஸ்தான் மாணவர் சங்கம்

லண்டன், டிச. 26

பாகிஸ்தான் மாணவர் சங்கக் கூட்டத்தில் ஹைகமிஷனர் ரஹிம்துல்லா பேசியபோது பாகிஸ்தான் நிர்மாணத்திற்கு உதவும்படி கேட்டுக்கொண்டார்.

கிறிஸமஸ தினத்தில் நுக்க சம்பவங்கள்

விபத்துக்கள், பனி, மழை, சூறாவளி

அமெரிக்காவில் பலர் கொல்லப்பட்டனர்

லண்டன், டிச. 26

யுத்தத்திற்குபின் நடைபெற்ற கிறிஸமஸ பண்டிகைகளில் இவ்வருடத்திய கிறிஸமஸ பண்டிகை தினத்தில் உலகின் பல பாகங்களிலுமிருந்து கிடைத்து வரும் செய்திகளைக் கவனிக்கின், இந்த வருடத்திய கிறிஸமஸ விடுமுறை தினம் மகிழ்வுடுக்க சம்பவங்கள் நிறைந்ததாக இருக்கிறது. பாலஸ்தீனத்தில் போர்க்களம்; கிரீஸில் யுத்தம்; சீனத்தில் உள்நாட்டு சமர்; இவைகளில் ஏற்பட்டு வரும் ரத்தக் களறிகள் போதாதென்றும் மற்றும் பல இடங்களிலிருந்து கீழ்க்கண்ட கோர சம்பவங்களைப்பற்றிய தகவல்களும் கிடைத்துள்ளன.

நியூயார்க் நகரிலிருந்து கிடைத்த செய்தி அமெரிக்காவில் கிறிஸமஸ தினத்தில் 273 பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்று தெரிகிறது. டச்சு கடற்கரையில் ஒரு நார்வே கப்பல் வெடி வைத்திலகப்பட்டு 24 பேர்கள் கொல்லப்பட்டனர். ஃபிரான்சில் டைபாயிட் ஜுரம் பரவி வருவதால் கிறிஸமஸ தினத்தில் 10 பேர்கள் மாண்டனர். பிலிப்பைன் தீவுகளைச் சேர்ந்த சமார் தீவில் புயல் காற்றால் எழும்பிய பிரமாண்டமான அலைகள் ஊருக்குள் பிரவேசித்து வீதிகள் எல்லாம் ஜலத்தில் மூழ்கின. இதனால் மணிலா நகருக்கு பெரும சேதம் ஏற்பட்டது. துருக்கியில் 60 மணி நேரம் விடாது வீசிய சூறாவளியால் சில நகரங்கள் பாழாயின. அதோடு பனியும் பலத்த மழையும் பெய்தது.

நியூயார்க்கில் ஏராளமான பனி பெய்ததால் ரஸ்தாக்களை 14 அங்குல உயரத்திற்கு பனியால் மூடப்பட்டிருந்தன. போக்கு வரத்துகள் தடைப்பட்டன.

கிறிஸமஸ தினத்தன்று பிலந்து கடற்கரையில் விபத்திற்குள்ளான அமெரிக்கக் கப்பலிலிருந்து 28 பேர்கள் தப்பி பிழைத்தனர் மற்ற 20 பேர்கள் மாண்டனர்.

இத்தாலியில் மிலான் நகரருகே ஏற்பட்ட பஸ விபத்தில் 21 பேர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த வருடத்தில் 156 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன

இந்திய தோட்டத் தொழிலாளர் 62,101 பேர் இலங்கை வந்தனர்

தொழிற் சமிஷனர் அறிக்கை விபரங்கள்

கொழும்பு, டிச. 27

சென்ற வருஷத்தில் மொத்தம் 62,101 இந்திய தொழிலாளர் இலங்கை வந்திறங்கியதாக தோட்டக் கணக்குகள் வெளிப்படுகின்றன. 1946-ம் வருஷ ஆரம்பத்தில் இந்தியத் தொழிலாள மகாஜனங்களின் எண்ணிக்கை 633,000 ஆகும். 1946-ம் வருஷ முடிவில் இது 7,67,712 ஆக உயர்ந்தது. இது புள்ளி விவரங்கள் கொழும்பு கமிஷனரின் நிர்வாக அறிக்கையில் காணப்படுகின்றன.

156 வேலை நிறுத்தங்கள்

கடந்த வருஷத்தில் மொத்தம் 69 வேலை நிறுத்தங்கள் தோட்டங்களுக்கு வெளியே நடந்திருக்கின்றன. தோட்டங்களில் நடந்த 87 வேலை நிறுத்தங்களையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் 156 வேலை நிறுத்தங்கள் இங்கு நடைபெற்றுள்ளன.

தோட்டங்களில் தற்போது வேலைசெய்துவரும் இந்தியரல்லாத தொழிலாளரின் மொத்த எண்ணிக்கை 139,179 ஆகும்.

தொழிலாளர் சங்கங்களில் பண நிலைமை பின்வருமாறு:—

இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிலாளர் சங்கம் ரூபா 26,568-15 கை இருப்பு.

வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம் ரூபா 22,323-18 கை இருப்பு.

அகில இலங்கை கள்ளுத் தொழிலாளர் சங்கம் ரூபா 12,382-03. இவையே பண நிலைமை திருப்திகரமாக உள்ள சங்கங்கள். நஷ்டத்துக்காளாகி உள்ள சங்கங்கள் ஆசிரியர் தேசிய சங்கம், கணக்கப்பிள்ளைமார் சங்கம் ஆகிய இரண்டுமே.

தொழிற் சங்க அங்கத்துவம்

தொழிலாளர் சங்க அங்கத்துவ நிலைமை பின்வருமாறு: அகில இலங்கைத் தொழிற் சங்க காங்கிரஸ் 30,320 இலங்கை தொழிற் சங்க பெடரேஷன் 19,428.

இலங்கை லேபர் பெடரேஷன் 4483.

"மலேயா இலங்கையர் இந்தியருடன் இணையவேண்டியதே

டாக்டர் சோமசுந்தரத்தின் அபிப்பிராயம்

கொழும்பு, டிச. 27

"இலவசமான மலிந்த கல்வியுடன் நடப்பில் இருக்கும் பெருந்தொகைச் சீதன வழக்கமும் சேர்ந்து எங்கள் பிள்ளைகள் இந்நாட்டில் சுபீட்சமாக வாழ்வதைத் தடைசெய்கின்றன" என்று மலேயாவில் இருந்து லீவில் வந்திருக்கும் டாக்டர் ஏ. சோமசுந்தரம் இங்கு நேற்று குறிப்பிட்டார்.

"இன்றைக்கோ நாளைக்கோ மலேயாவில் உள்ள இலங்கையர் அங்கு நிரந்தரமாகக் குடியேறி விட்ட இந்தியருடன் இணைந்தொன்றாக" வேண்டியே நேரிடும். ஆனால் இலங்கையராய் இருப்பதால் நன்மை இல்லாமல் இல்லை. இலங்கையர் பிரிட்டிஷாருக்குச் சாதகமானவர்கள் என்று நம்பப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மலேயப் பொதுவாழ்வில் பிரமுகரான டாக்டர் சோமசுந்தரம் யுத்த காலத்தில் இந்திய சுதந்திர இயக்கத்தில் சுபாஷ் சந்திரபோஸின் தீவிரமாகக் கடமை ஆற்றியதோடு வெல்லெஸ்லீ பகுதி இந்திய சுதந்திர லீகின் தலைவராகவும் விளங்கினார்.

"இந்தியாவில் வசிக்கும் மொத்தம் 20,000 இலங்கையர்களும் இந்தியர்களுடன் ஒன்றாக இணைந்துவிடுமபடியே நேரிடும். பாரபக்ஷபானால் அவர்கள் பழக்க வழக்கங்களும், சம்பிரதாயங்களும் ஒன்றாகத்தானே விளங்குகின்றன" என்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

பர்மா அரச பரம்பரையினர்

ரங்கூன், டிச. 27

பர்மா அரச வம்சத்தினரின் தூதுகோஷ்டி யொன்று பர்மா பிரதமர் தாக்கின்நூவை பேட்டி கண்டு தங்கள் பென்ஷனை அதிகரிக்கும்படி மனுத் தாக்கல் செய்தது. தைபாவ் அரச பரம்பரையைச் சேர்ந்த 70 வயதான பையின்மானு என்பவர் இத்தூது கோஷ்டிக்கு தலைமை வகித்தார். இவர்களுடைய கோரிக்கையை கவனிப்பதாக பிரதமர் உறுதியளித்தார். (ராய்ட்டர்)

கப்பலில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

சௌதாம்டன், டிச. 26

பர்மா, மலேயா, ஹாங்காங் ஆகிய இடங்களிலிருந்து திரும்பிய ஆயிரம் பிரிட்டிஷ் யுத்த வீரர் கிறிஸ்மஸ் தினத்துக்கு முந்தினம் இங்குவந்து சேர்ந்தனர். கிறிஸ்மஸ் தினத்தன்று கப்பலில் இவர்களுக்கு அதிகாரிகள் விசேடபியர் ரேஷன்படி அளித்தார்கள் கப்பலின் டச்சு மாலுமிகள் இவர்களுக்கு பிரிட்டிஷ்முறைப்படி [ராய்ட்டர்]

பொலன்னறுவைக்கு போலிஸார் விஜயம்

கொழும்பு, டிச. 29

பாராக்கிரம சமுத்திர ஆடி யேற்ற விவசாயப் பண்ணைகளில் சென்ற சில தினங்களாக வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது. நிலைமையை சமாளிப்பதற்காக அநுராதபுரத்திலிருந்தும் திரிகோணமலையிலிருந்தும் ஆயுதந்தாங்கிய போலிஸார் அங்கு சென்றிருக்கின்றனர்.

தேவை

பிரசித்திபெற்ற இந்திய மருந்துச் சாலைக்கு கொழும்பு நகருக்கு மட்டும் ஒரு சோல ஏஜெண்டு தேவை. ரூ 2000/- ரொக்க டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டும் எழுதவும்.

C/o சுதந்திரன்,
194A தட்டாரத் தெரு கொழும்பு

இருமல் இளைப்பு சுகம்

T. B. & Asthma

இருமல், கபக்கட்டு, கபத்துடன் இரத்தம் விழுதல், மார்நோய்களிற்கும் வரும், உடம்பு இளைத்து வருதல் உள்ள [T.B.] க்ஷயரோகத்திற்கும், இளைப்பு, ஏங்கல் மூச்சுத்திணறல், பீனிசம், தடுமன் ஆகிய உபாதைகளுடன் கூடிய (Asthma) சுவாசகாசம் மந்தாரகாசத்திற்கும் நிகரற்ற சஞ்சீவி.

20 வருட அனுபவம் பெற்ற மருந்துகள். ஆயிரக்கணக்கான பேர்கள் சாப்பிட்டுச் சுகம்பெற்றது.

25 நாள் தாளகபஸ்பமும், சித்திரமூலச்சூரணமும் ரூபா 12-8-0 தபாற் செலவு ரூபா 1-8 0

கேட்டால் இனாம்.

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி (S.India)

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

என். எஸ. கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வாதன், எம். எஸ. சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்

கன்னிகா

மகத்தான 7-வது வாரம்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புடன் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

'இழந்த உறுதி'

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ் சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 28-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தாரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org